விலை ரூபா: 5.00

பக்கங்கள்:-பத்து

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

சங்கு 03 வள்ளுவர் ஆண்டு 2033 ஆனி 26 புதன்கிழமை (10.07.2002) தொலைபேசி 3378 ஒலி 203

நங்கையர் விரும்பும் நவீன டிசைன் தங்க நகைகளுக்கு...



நியூ நகுலா ஜூவல்லரி

74, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# கண்காணிப்புக்குழுத் தலைவருடன் புலித்தேவன் நேற்று மட்டு. விஜயம்

## இராணுவ உயர் அதிகாரிகளுடன் சந்திப்பு

(மட்டக்களப்பு, நிருபர்)

**யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொண்ட் பியூறு ஹெவ்டே; விடுதலைப்புலிகளின் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தொடர்பாளர் புலித்தேவன் ஆகியோர் நேற்று மட்டக்களப்பக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டு, புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டபின் உள்ள முன்னேற்றம் தொடர்பாக ஆராய்ந்துள்ளனர்.**

அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் யுத்தநிறுத்தப் புரிந்துணர்வு உடன்படிக்கை அமுலுக்கு வந்து ஐந்து மாதங்கள் கடந்த நிலையில் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுத் தலைவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை கிளிநொச்சியில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனைச் சந்தித்து புரிந்துணர்வு உடன்படிக்கை தொடர்பாகக் கலந்துரையாடிய பின் நேற்று மட்டக்களப்பிற்கு விஜயம் செய்துள்ளார்.

அங்கு சென்ற அவர் விடுதலைப் புலிகளின் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுப்பொறுப்பாளர் மற்றும் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு உறுப்பினர்களையும் மட்டக்களப்பு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்தில் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்.

இப்பேச்சுவார்த்தைகளின் போது புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்திட்டபின் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் பற்றியும் ஒப்பந்த

(10ம் பக்கம் பார்க்க)

# 16 இந்திய மீனவர்கள் மன்னார்க் கடலில் கைது

## ஒருவர் மரணம்

(மன்னார்)

இந்திய மீனவர்கள் 16பேர் மன்னார்க்கடலில் தத்தளித்த போது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவர்களில் ஒருவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு அங்கு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 16மீனவர்களும் வள்ள உரிமையாளர்களினால் அழைத்து வரப்பட்டு அநாதரவாக விடப்பட்டதாக கடற்படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ம)

## வேலணைப் பிரதான வீதி மூடப்பட்டதைக் கண்டித்து

# மாணவர்களும் ஆசிரியர்களும் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்

(ஊர்காவற்றுறை)

வேலணை சேர் துரைச்சாமி மகா வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து கல்லூரிக்குச் செல்லும் பிரதான போக்குவரத்துப் பாதையைத் திறந்து விடுமாறு கோரி பிரதான வீதியில் நேற்றுப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

வேலணை வங்களாவடிச் சந்தியூடாக ஊர்காவற்றுறைக்குச் செல்லும் பேருந்தை கடற்படையினர் அப் பாதையூடாக செல்லவிடாது புதிதாக அமைத்த பாதையூடாக செல்லுமாறு பணித்ததை அடுத்தே மேற்படி பகிஷ்கரிப்பில் மாணவர்களும் ஆசிரியர்களும் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 8.30மணிக்கு ஆரம்பமான இப் பகிஷ்கரிப்புப் போராட்டம் முற்பகல் 11மணிவரை இடம்பெற்றது.

பிரதான வீதி மூடப்பட்டமை குறித்து மாணவப்பிரதிநிதிகள் தீவக கடற்படைக் கட்டளை அதிகாரி எதிர்சிங்க மற்றும் பொதுசனத் தொடர்பு அதிகாரி ஆகியோருடன்

(10ம் பக்கம் பார்க்க)

## செங்கடலில் தத்தளித்த

# 148 இலங்கையருக்கு சவுதி தஞ்சமளித்தது

(கொழும்பு)

சட்டவிரோதமாக இத்தாலிக்குள் நுழையமுயன்று சுமார் 70நாட்கள் செங்கடலில் தத்தளித்த நிலையில் 148இலங்கையர்கள் சவுதிஅரேபியத் துறைமுகம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நீண்ட நாட்களாக உணவோ, எரிபொருட்களோ இல்லாத நிலையில் அவதிக்குள்ளான இவர்களுக்கு உதவிசெய்யும் நோக்குடன் சவுதியின் ஜித்தா துறைமுகத்தில் இவர்கள் [illegible]

நிலையில் மீட்கப்பட்ட மூன்று பேருக்கு வைத்திய சிகிச்சை வழங்கப்பட்டதாகத் தெரியவருகிறது (த)

# தீவகத்திற்கு புதிய கடற்படைத்தளபதி

(வவுனியா)

அண்மையில் வேலணைப்பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சுமுகமான உறவை பேணத்தவறிய

(ஊர்காவற்றுறை)

வேலணை சேர் துரைச்சாமி மகா வித்தியாலய மாணவர்களும் ஆசிரியர்களும் இணைந்து கல்லூரிக்குச் செல்லும் பிரதான போக்குவரத்துப் பாதையைத் திறந்து விடுமாறு கோரி பிரதான வீதியில் நேற்றுப் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர்.

வேலணை வங்களாவடிச் சந்தியூடாக ஊர்காவற்றுறைக்குச் செல்லும் பேருந்தை கடற்படையினர் அப் பாதையூடாக செல்லவிடாது புதிதாக அமைத்த பாதையூடாக செல்லுமாறு பணித்ததை அடுத்தே மேற்படி பகிஷ்கரிப்பில் மாணவர்களும் ஆசிரியர்களும் ஈடுபட்டனர்.

நேற்றுக்காலை 8.30மணிக்கு ஆரம்பமான இப் பகிஷ்கரிப்புப் போராட்டம் முற்பகல் 11மணிவரை இடம்பெற்றது.

பிரதான வீதி மூடப்பட்டமை குறித்து மாணவப்பிரதிநிதிகள் தீவக கடற்படைக் கட்டளை அதிகாரி எதிர்சிங்க மற்றும் பொதுசனத் தொடர்பு அதிகாரி ஆகியோருடன்

(10ம் பக்கம் பார்க்க)

செங்கடலில் தத்தளித்த நிலையில் 148இலங்கையர்கள் சவுதிஅரேபியத் துறைமுகம் ஒன்றில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

நீண்ட நாட்களாக உணவோ, எரிபொருட்களோ இல்லாத நிலையில் அவதிக்குள்ளான இவர்களுக்கு உதவிசெய்யும் நோக்குடன் சவுதியின் ஜித்தா துறைமுகத்தில் இவர்கள் பொறுப்பேற்கப் பட்டுள்ளனர்.

உடல் நிலை பாதிக்கப்பட்ட

## தீவகத்திற்கு புதிய கடற்படைத்தளபதி

(வவுனியா)

அண்மையில் வேலணைப்பகுதியில் இடம்பெற்ற சம்பவம் தொடர்பாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் சுமுகமான உறவை பேணத்தவறிய கடற்படையின் தீவுப்பகுதித தளபதி

(10ம் பக்கம் பார்க்க)

# வவுனியா கல்விச் சமூகம் திரண்டு நேற்று மாபெரும் எழுச்சிப் பேரணி

## சமாதானப் பேச்சை உடன்நடத்த வலியுறுத்து

(வவுனியா)

அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையில் ஏற்பட்டுள்ள புரிந்துணர்வு உடன்படிக்கையை அமுல் படுத்துவதில் அரசு காட்டிவரும் அசமந்தப் போக்கைக் கண்டித்தும், பாடசாலைகளில் இராணுவம் குடிகொண்டிருப்பதால் மாணவர்களின் கல்வி பாதிப்படைந்திருப்பதைக் கண்டித்தும், வவுனியா மாவட்ட கல்விச் சமூகத்தினால் மாபெரும் எழுச்சிப் பேரணி ஒன்று நேற்று வவுனியாவில் நடத்தப்பட்டது.

நேற்றுக்காலை 9.30 மணியளவில் வவுனியா தமிழ் மத்தியமகா வித்தியாலயத்தில் ஆரம்பமான இவ் எழுச்சிப் பேரணியில் மாணவர்கள், ஆசிரியர்கள், அதிபர்கள், பொது மக்கள் என ஆயிரக்கணக்கானோர் கலந்து கொண்டனர்.

இப்பேரணியில் சென்ற கல்விச் சமூகத்தினர், பாடசாலைகளில் இருந்து இராணுவமே வெளியேறு; அரசே

(10ம் பக்கம் பார்க்க)

# முஸ்லிம்களின் பாதுகாப்புக்கு பிரதமர் உத்தரவாதம்

## முஸ்லிம் பிரதிநிதிகளிடம் உறுதி

(கொழும்பு)

கிழக்கில் வாழுகின்ற முஸ்லிம் மக்களின் பாதுகாப்புக்கு பூரண உத்தரவாதத்தையும் வாழைச்சேனை மூதூர் பகுதிகளில் இடம்பெற்றவன் முறைச்சம்பவத்தினைப்போல் மீண்டுமொரு வன்முறைச் சம்பவம் இடம் பெறாத வகையில் உரிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ளும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா தன்னைச்சந்தித்த முஸ்லிம் அமைச்சர்கள், எம்.பிக்களிடம் உறுதி அளித்துள்ளார்.

கிழக்கில் அண்மையில் இடம் பெற்ற வன்செயல்கள் தொடர்பாக முஸ்லிம் மக்கள் பாதுகாப்பை உறுதிப்படுத்துமுகமாக பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவை முஸ்லிம் எம்.பிக்கள், அமைச்சர்கள்

(10ம் பக்கம் பார்க்க)


ஹற்றன் நஷனல்

சுபாசிறி

சொந்த தேவைகளுக்கான கடன் திட்டம்

உங்களுக்கென்றே வடிவமைக்கப்பட்ட, உங்கள் தேவைகளுக்கெல்லாம் கைகொடுக்கும் தனிப்பட்ட கடன் திட்டம்

இதோ! உங்கள் உற்றதுணையான சுபாசிறி கடன் பற்றிய விபரங்கள்

* ரூ. 25,000/- முதல் ரூ 400,000/- வரை கடன் வசதி பெறலாம்
* மூன்று வருடங்கள் வரை மீளச் செலுத்தும் வசதி
* கவர்ச்சிகரமான வட்டி வீதம்
* எழுத்து வேலைகள், பத்திரப்படுத்தல்கள் குறைவு

மேலதிக விபரங்களுக்கு HNB யாழ்ப்பாணக் கிளையை நாடுங்கள்

ஹற்றன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

யாழ்ப்பாணக் கிளை
இல. 212, 214, ஆஸ்பத்திரி வீதி,
தொலை பேசி :- 021 - 2787, 021 - 3463
தொலை நகல் :- 021 - 3194,

[C/4634]

# ஈழ விடுதலைப் போரில் இதுவரை
# 3762 பெண்கள் வீரமரணம்
## இவர்களில் 64பேர் கரும்புலிகள்

(கிளிநொச்சி)

27.11.1982 தொடக்கம் 30. 06. 2002 வரையிலான சுமார் 20 வருட காலத்தில் 3 ஆயிரத்து 762 பெண்கள் உயிரிழந்துள்ளனர்.

விடுதலைப் புலிகள் மாவீரர் பணிமனை அண்மையில் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்ட விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது;

மேற்படி காலப்பகுதியில் 13 ஆயிரத்து 875 ஆண்கள் உட்பட 17 ஆயிரத்து 637 விடுதலைப் புலிகள் உயிரிழந்துள்ளனர்.

78 தரைக்கரும்புலிகள், 163 கடற்கரும்புலிகள் உள்ளடங்கிய 241 கரும்புலிகளும், 280 எல்லைப்படை வீரர்களும் இவர்களில் அடங்குவர்.

தரைக் கரும்புலிகளில் 60 பேர் ஆண்கள் 18 பேர் பெண்கள்.

கடல் கரும் புலிகளில் 117 பேர் ஆண்கள், 46 பேர் பெண்கள்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஆகக் குறைந்த உயிரிழப்பு 1982 இல் நிகழ்ந்துள்ளது. அவ்வாண்டு ஒருவர் மட்டுமே உயிரிழந்துள்ளார்.

ஆகக் கூடிய உயிரிழப்பு 1997 இல் நிகழ்ந்துள்ளது 2 ஆயிரத்து 103 பேர் உயிரிழந்துள்ளனர்.

இதுவரை உயிரிழந்தவர்களில் 2 பெண்கள் உள்ளிட்ட 266 ஈரோஸ் குழுவைச் சேர்ந்தவர்களும், 10 தனிக் குழுவைச் சேர்ந்தவர்களும் அடங்குவர்.

இதேவேளை, ஆனையிறவு இராணுவ முகாம்மீது விடுதலைப் புலிகள் நடத்திய மாபெரும் தாக்குதல் தொடக்கம் தவளைப் பாய்ச்சல், ஓயாத அலைகள் மற்றும் ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கைக்கு எதிரான தாக்குதல் உட்பட இதுவரையில் இடம்பெற்ற 17 பெரும் தாக்குதல்களில் 7 ஆயிரத்து 400 இற்கும் மேற்பட்டோர் உயிரிந்துள்ளனர்.

1991 ஆம் ஆண்டு ஆனையிறவு இராணுவ முகாமைச் சூழ நடைபெற்ற ஆகாய கடல் வெளிச் சமரில் 604 பேரும், மணலாறு சமரில் 233 பேரும் பூநகரி மீது நடத்தப்பட்ட தவளைப் பாய்ச்சல் நடவடிக்கையில் 640 பேரும், கொக்குத் தொடுவாயில் நடைபெற்ற தாக்குதலில் 175 பேரும்,

இடி முழக்கம் நடவடிக்கையின் போது 181 பேரும், ரிவிரசஎன்றழைக்கப்படும்சூரியக் கதிர் இராணுவ நடவடிக்கையின் போது 438 பேரும், ஓயாத அலைகள் 1 இல் 315 பேரும்,

கிளிநொச்சி மீதான இராணுவத்தின் சத்ஜய-தாக்குதல் நடவடிக்கையின் போது 100 பேரும், சத்ஜய -2 இன்போது 133 பேரும், பரந்தன்- ஆனையிறவுத் தளங்கள் மீதான தாக்குதலின் போது 193 பேரும், கிளிநொச்சி, பரந்தன் படைத்தளங்கள் மீதான ஊடுருவல் தாக்குதல்களில் 300 பேரும்,

ஓயாத அலைகள் 2 இல் 403 பேரும், ஜயசிக்குறு இராணுவ நடவடிக்கையின்போதும் அதன் எதிர்த்தாக்குதல்களில் 2 ஆயிரத்து 146 பேரும்,

ஓயாத அலைகள் 3 இல் 181 பேரும், அக்கினிகீல என்றழைக்கப்படும் தீச்சுவாலை இராணுவ நடவடிக்கை முறியடிப்புச் சமரில் 141 பேரும் விடுதலைப் புலிகள் தரப்பில் உயிரிழந்திருப்பதாக மாவீரர் பணிமனையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

---

# நிதியமைச்சரின் உரை மக்களை ஏமாற்றிவிட்டது
## ஜே. வி. பி. கருத்து

(கொழும்பு)

பொருட்கள் மீதானவிலைக் குறைப்புக்களை எதிர்பார்த்திருந்தமக்களுக்கு வெறுமனே புள்ளி விபரங்களைக் காட்டி நிதியமைச்சர்சொக்ஸி ஏமாற்றியுள்ளார் என மக்கள் விடுதலை முன்னணி குற்றம்சாட்டியுள்ளது.

அதிகரித்த பொருட்கள் சேவைகள் என்பவற்றின் வரிகளை சிறிதளவு குறைந்துள்ள நிலையில் அவர் இந்த கைங்கரியத்தை நிகழ்த்தியுள்ளார். இதைத் தவிர நாட்டு மக்களுக்கு எந்தவொருநன்மையும் கிடைக்க வில்லையென அக்கட்சி மேலும் குற்றம் சாட்டியுள்ளது.

கடந்தஞாயிற்றுக்கிழமைநிதியமைச்சர் கே.என். சொக்ஸி ஆற்றிய உரை சம்பந்தமாக மக்கள் விடுதலை முன்னணி நேற்று முன்தினம் தனது கருத்தை வெளியிட்ட போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப் பட்டுள்ளது. (உ-8)

# இலங்கை அபிவிருத்தி நிர்வாகப் பயிற்சியாளர் இன்று யாழ். வருகை

(யாழ்ப்பாணம்)

இலங்கை அபிவிருத்தி நிர்வாகப் பயிற்சியாளர் குழு இன்று தென்பகுதியிலிருந்து யாழ்ப்பாணம் வருகைதரவுள்ளது.

30 பேர் கொண்ட இப்பயிற்சியாளர்குழுவில் திணைக்கள அதிகாரிகள், ஆலோசகர்களும் அடங்கியுள்ளனர்.

இரு நாள் விஜயத்தை மேற்கொண்டு இங்கு வரும் குழுவினர் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு யாழ். செயலகத்தில் அரச அதிபரைச் சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

தென்மராட்சி, தெல்லிப்பழை, கீரிமலை போன்ற பகுதிகளுக்குச் சென்று இக் குழுவினர் அப்பகுதி மக்களையும் சந்திக்கவுள்ளனர். (ஷ-6)

### இலங்கையில் மேற்கொள்ளப்படும்
# ச. செ. ச. பணிகளுக்கு யப்பானிய அரசு நிதியுதவி

(கொழும்பு)

சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் இலங்கையில் இவ் வருடம் மேற்கொண்டு வரும் முயற்சிகளுக்கு யப்பானிய அரசு 44 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளது.

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் யுத்தசூழ் நிலை காரணமாக பாதிக்கப்பட்டமக்களின் நலன்களைப் பேணும் வகையிலேயே இந்நிதி பயன்படுத்தப்படவுள்ளதுடன் அவசர நிவாரணங்களுக்கும் இது பயன்படுத்தப்படவுள்ளது.

சர்வதேச செஞ்சிலுவை சங்கம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்கயப்பானிய அரசு இந் நிதியுதவியினை வழங்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

கடந்த காலங்களிலும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கம் மேற்கொண்டு வந்த தொலைத் தொடர்பு, மருத்துவ சேவைகளுக்கு யப்பானிய அரசுநிதி வழங்கி வந்தது குறிப்பிடத் தக்கது. (உ-8)

### கிழக்குச் சம்பவம் தொடர்பான
# அறிக்கையை அரசு விரைவில் வெளியிடும்
### பாதுகாப்பு அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

கிழக்குப் பிரதேசத்தில் அண்மையில் நடைபெற்ற வன் செயல்கள் தொடர்பாக இன்னும் ஓரிரு நாளில் அறிக்கை வெளியிடப்படும் என்று பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன நேற்று பாராளுமன்றத்தில் தெரிவித்தார்.

சபை ஒத்தி வைப்பு நேரத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பொறுப்புணர்வுடனேயே செயற்பட்டுவருகிறது. அதன் பொறுப்பை எவரும் நினைவூட்டத்தேவையில்லை.

பொறுப்பு வாய்ந்த அரசு என்பதனாலேயே கிழக்கில் நடைபெற்ற சம்பவம் தொடர்பாக அறிக்கையை வெளியிடவுள்ளது எனவும் அமைச்சர் திலக் மாரப்பன அங்கு மேலும் தெரிவித்தார். (ஷ-8)

## சந்தை திறப்பு

(யாழ்ப்பாணம்)

அரியாலை புங்கங்குளம் சந்தை இம்மாதம் 22 ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். நகர முதல்வர் செ.கந்தையனால் திறந்து வைக்கப் படவுள்ளது. (உ-19)

## வாகன விபத்தில் 50 பயணிகள் காயம்

(கொழும்பு)

வெல்லவாய பகுதியில் நேற்று இடம்பெற்றபேருந்து- மினிபஸ் விபத்துச் சம்பவத்தில் 50 பயணிகள் காயமடைந்துள்ளனர்.

காயமடைந்தவர்களில் அநேகமானோர்மாணவர்கள் என்றும் காயமடைந்தவர்களில் 5 பேர் கடும் காயங்களுக்கு உள்ளாகியுள்ளதாகவும்தெரிவிக்கப்படுகிறது. (த)

## கட்டாக்காலி நாய்கள் இன்று அழிப்பு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட ஆடிய பாதம் வீதி, இராமலிங்கம் வீதி, சட்டநாதர் வீதி, பருத்தித்துறை வீதி, செங்குந்தா வீதி ஆகிய பகுதிகளில் இன்று காலை 8 மணிமுதல் கட்டாக்காலி நாய்கள் பிடித்து அழிக்கப்படவுள்ளன.

அதேவேளை மேற்படி பிரதேசசபை எல்லைக்குட்பட்ட பகுதி மக்கள் வளர்ப்பு நாய்களுக்கான உரிமத் தகடுகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளுமாறு சபைத் தலைவர் க.மணிபல்லவ ராஜன் கேட்டுள்ளார். (த-5)

# மாகாணக் கல்விப்பணிப்பாளருடன் யாழ். அதிபர்கள் சங்கம் சந்திப்பு

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்கு மாகாண சபையின் கல்விப் பணிப்பாளர் இசைதீன் கடந்த வாரம் யாழ்ப்பாணம் வருகை தந்தபோது யாழ் மாவட்ட அதிபர்கள் சங்கப் பிரதிநிதிகள் அவரைச் சந்தித்து கல்வி நிலைகுறித்து பேச்சுவார்த்தை நடத்தினர்.

யாழ். மத்திய கல்லூரியில் கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு இடம் பெற்ற இச்சந்திப்பில் பின்வரும் விடயங்கள் அதிபர்கள் சங்கத்தால் முன் வைக்கப்பட்டு பணிப்பாளரினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

முன் வைக்கப்பட்ட விடயங்கள் வருமாறு:-

- மாகாண மட்ட தமிழ்த் தினப் போட்டியை யாழ்ப்பாணத்தில் நடத்துவது.
- அதிபர் பதவிக்கு வெற்றிடம் கோரப்படும்போது வலயம், கோட்டம் என்ற ரீதியில் வரையறுக்காமல் மாவட்டத்திலுள்ள எல்லாப் பாடசாலைகளுக்கும் விண்ணப்பிக்க வசதியளித்தல்.
- அதிபர்களின் அனுமதி இன்றி மாணவர்களின் கல்வி பாதிக்கப்படக்கூடியதாக ஆசிரியர்களின் இடமாற்றம் மேற்கொள்ளப்படுவதை நிறுத்துதல்.
- யாழ்ப்பாணத்திலிருந்து கிழக்கு மாகாணத்திற்கு விளையாட்டுப் போட்டிகளுக்குச் செல்லும் மாணவர்களின் உடல் உளப்பாதிப்புகளைக் கவனியாது அதிகாரிகள் போட்டிகளை நடத்துவதைத்தவிர்த்தல்.
- மாகாணமாவட்டப்போட்டிகள் தொடர்பாக வெளி மாவட்டங்களுக்குச் செல்லும் மாணவர்களின் செலவை மாகாணசபை பொறுப்பேற்றல்
- சகலவலயங்களிலும்இடம் பெறும் ஆசிரியஇடமாற்றங்களின் போது தொடர்ந்தும் அதிபர்கள் சங்கப்பிரதிநிதிகள் கலந்துகொள்ள வசதி செய்தல் போன்ற விடயங்கள் முன்வைக்கப்பட்டன.
- இவ் விடயங்கள் பணிப்பாளரினால்கொள்கையளவில் ஏற்றுக்கொள்ளப் பட்டுள்ளதாக அதிபர்கள்சங்கப் பிரதிநிதிஒருவர் தெரித்தார் (ந)

# எதிர்க்கட்சிகள் அமளி துமளி
# அவை 5 நிமிடங்கள் ஒத்திவைப்பு

(கொழும்பு)

நேற்றுக்காலை பாராளுமன்றம் கூடியபோது சபையில் ஏற்பட்ட குழப்பம்காரணமாக சபை அமர்வுகளை சபாநாயக்கர்ஜோசப் மைக்கல் பெரேரா 5நிமிடங்களுக்கு ஒத்திவைத்தார்.

வடக்கு கிழக்கு பிரதேசங்களில் அண்மையில் நடந்த அசம்பாவிதம் தொடர்பாக எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷா சபையில் பிரஸ்தாபித்தார்.

அதனைத்தொடர்ந்து கருத்துத் தெரிவித்த மக்கள் விடுதலை முன்னணி உறுப்பினர் விமல் வீரவன்ச, மகிந்தராஜ பக்ஷாமுன்வைத்த கருத்துக்கு ஐக்கியதேசிய முன்னணி அரசாங்கத்தின் பொறுப்பு வாய்ந்த அமைச்சர் ஒருவர் பதில்கூற வேண்டும் எனவும் அங்கு கேட்டுக் கொண்டார்.

இதுதொடர்பாக அரசு எவ்வித கருத்தும் வெளியிடுவதாசஇல்லை என சபாநாயகர் அறிவித்ததை தொடர்ந்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் பல்வேறு கோசங்களை எழுப்பி அவையின்அமைதிக்கு பங்கம் விளைவித்தனர்.

இதைத்தொடர்ந்து தம் பங்குக்கு மக்கள் விடுதலை முன்னணி பாராளுமன்ற உறுப்பினர்களும் அவர்கள் பாணியில் கோஷங்களை எழுப்பி அவையின் மத்தியில் கூடிஅமளி துமளியை ஏற்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்தே அவை5 நிமிடங்கள் ஒத்தி வைக்கப்பட்டது. (உ-8)

# சட்டவிரோத மது விற்பனை 19பேருக்கு தண்டம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டவிரோதமாக மது பானம் விற்பனை செய்த 19 பேரிடமிருந்து ஒரு இலட்சத்து 22 ஆயிரத்து 500 ரூபா குற்றபணமாக யாழ் நீதிமன்றினால் நேற்று அறவிடப்பட்டுள்ளது.

சட்டவிரோதமாக மது பானம் விற்பனை செய்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் 23 பேர் நேற்றைய தினம் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டிருந்தனர்.

இவர்களில் நான்குபேர் எச்சரிக்கை செய்யப்பட்டதுடன் ஏனைய 19பேரிடம் இருந்தும் 98ஆயிரத்து500 ரூபா தண்டப்பணமாகவும் 24ஆயிரம்ரூபா தர்மப்பணமாகவும் அறவிடப்பட்டுள்ளது, (த-6)

## 'ஆத்மா' வெளியாகியது

(யாழ்ப்பாணம்)

மனிதம் கலந்தாய்வுக் குழுவினரால் வெளியிடப்படும் இருமாத இதழான 'ஆத்மா' சமூகவியல் சஞ்சிகையின் யூலை-ஆகஸ்ட் மாத இதழ் வெளிவந்துள்ளது. (ஷ)

# அன்பு, கருணையுடன் ஊனமுற்றோரை அணுகி சேவை செய்வதே மிகமேலான தெய்வப்பணி

அரிதுஅரிதுமானிடராதல் அரிது.மானிடராய்ப் பிறப்பினும்கூன், குருடு, செவிடு, முதலாய அங்கவீனங்கள் இன்றிப் பிறத்தல் அரிது. அத்தகைய நிறைவான ஒரு பிறப்பு நமக்குக் கிடைத்துவிட்டால் இறைவனுக்கு நாம் நன்றி செலுத்துதல்வேண்டும். இறைவனுக்கு மட்டும் நாம் நன்றி உடையவர்களாக இருப்பதை விடஎம்மைப்பெற்றுவளர்த்து ஆளாக்கிய பெற்றோர்க்கும், முதியோர்க்கும் வறியோர்க்கும் பிறப்பாலும் இடையிட்டும் வாழ்க்கையில் ஊனமுற்றவர்களுக்கும் உதவியாகவும் ஊன்றுகோலாகவும் துணைநின்று எம்மால் இயன்றஉதவிகளைச் செய்வதே பன்மடங்கு புண்ணியத்தை தேடித்தரும் இறை தொண்டாக நினைந்து செயற்படுதல் நமது கடமையாகும்.

தெய்வப்பணி
என்னை நன்றாகஇறைவன்
படைத்தனன்
தன்னை நன்றாக தமிழ்
செய்யுமாறே'
என்றும்
'யான் பெற்ற இன்பம்
பெறுக இவ் வையகம்'
என்றும்

திருமூலர் தமது திருமந்திரத்தில் கூறியுள்ளார். இதன் பொருள் உடல் ஊனமின்றி நல்ல உடலை எனக்கு இறைவன் தந்தது தனக்கு பணிசெய்வதற்காகவே என்றும், யான் இப் பிறவியில் பெற்ற இன்பம் யாவும் இவ் வையகத்துள் உள்ள உயிர்கள் யாவும் பெறவேண்டும் என்ற பரந்த நோக்கமே ஆகும். இதேபோலவே தாயுமான சுவாமிகளும்

'எவ்வுயிரும் என்னுயிர்
போல் எண்ணியிரங்கவு
நின்
தெய்வ அருட் கருணை
செய்வாய் பராபரமே
என்றார்

எல்லா உயிர்களையும் எனது உயிராகக் கருதிஅவற்றிற்காக இரங்கி கருணை உள்ளத்துடன் தொண்டு செய்வதற்கான தெய்வத் தன்மையை தருமாறு பரம்பொருளை வேண்டுகிறார்.

என்பர் பணிசெய்யவெனை ஆளாக்கிவிட்டால் இன்ப நிலைதானே வந்தெய்தும் பாராபரமே; என்றபாடல் மூலம் யாருக்கு எனது சேவைகள் தேவைப்படுகின்றதோ அந்தமெய் அன்பர்களுக்கு பணிசெய்வதற்கான வல்லமையை எனக்கு நீதந்தால் போதும் அத்தொண்டின் மூலமே பேரின்பநிலை எனக்கு வலியவே வந்துசேரும் என்றும் இறைவனைவேண்டுகின்றார். இவற்றிலிருந்து நாம் அறிந்து கொள்ளும் உட்பொருள் யாதெனில் ''மக்கள் சேவையே மகேசுவரன் சேவை'' உயிர்களிடத்தில் அன்புகொண்டு பணிசெய்வதிலேதான் நாம்பேரின்ப நிலையைச் காணலாம் என்பதாகும். இது இந்து சமயத்தில் நான்கற்றறிந்த தனி உண்மையாகும்.

## விஜயமலர் செல்வம்

யாழ்பண்டத்தரிப்பு மகளிர் உயர்தர பாடசாலை

அன்பும் பணியும்

இதேபோலவே, கிறிஸ்தவ மதம், பௌத்தம், இஸ்லாம் யாவும் உயிர்களிடத்தில் அன்புசெய்வதும், பணிசெய்வதுமே நோக்கமாக'' ஒன்றே குலம் ஒருவனே தேவன்'' என்ற ஒருகோட்பாட்டின் கீழ் இயங்குவதைக் காணலாம். சர்வமதத்தினரும் இன, மத வேறுபாடுஇன்றி ஆற்றவேண்டிய சேவைகள் ஊனமுற்றவர்களுக்கே பெரும்பகுதி கிடைக்கக் கூடியதாக நாம் பாடுபடுதல் வேண்டும். ஊனமின்றிப் பிறந்தவர்கள் தமது உடலுழைப்பாலும், திறமைகளாலும் தம்மைப்பாதுகாக்கவும் வாழ்க்கையில் உயரவும் முடியும். ஊனமுற்றவர்'ளுக்கே அடுத்தவர் தயவும் அன்பும் ஆதரவும் தேவைப்படுகின்றன. ஊனமுற்றோர் என்று சொல்லும்போதே அவர்களின் உளநிலைபாதிக்கப்பட்டிருக்கும் என்பதை நாம் உணர்ந்து அவர்கள் மனம் நோகாது கருணையுள்ளத்துடன் அணுகுதல்வேண்டும். நட்பும், கொடையும், தயவும் ஒருவருக்குப் பிறவிக்குணங்களாம். இத்தகைய பண்புகளுடன் பிறவியெடுத்து; வாழ்க்கையில்நொந்துபோனவர்களுக்காகவேசேவை செய்து அண்மையில் அணைந்துபோன ஒரு தீபம் தான் அன்னைதிரேசாஅம்மையார். கோடிக்கணக்கான மக்களின் கண்ணீரைத் துடைத்த அன்னையின் மறைவு ஊனமுற்றோர்க்குப் பேரிழப்பாகும்.

கண்பார்வையற்றோர்

ஊனம் என்றதும் முதலில் நம் மனக்கண்முன் தோன்றுவோர் கண்பார்வையைஇழந்தவர்களேயாகும். கண்பார்வையை இழந்தோர் வாழ்கையில் பெரும் பகுதியை இழந்தவர்களே. ஆனால் இவர்களை தன்னம்பிக்கை உள்ளவர்களாகவும் சமூகத்தில் சகல வசதிகளையும் இன்பங்களையும் பெறக்கூடியதாக ஆக்க சமூகத்தினரால் முடியும். பார்வையற்றோர்க்கான நவீன கல்விமுறைகள் மூலம் சகல துறைகளிலும் கற்கலாம். கைகளால் தடவிப் பார்த்து எழுத்துக்களை அறிந்து கற்கக்கூடியதாக கல்விமுறை நீண்டகாலமாக நடைமுறையில் உள்ளது. இவர்கள் நடமாடுவதற்கு உதவியாக இருக்கும் வெள்ளைப்பிரம்புகூட தற்போது நவீனமுறையில் கண்டுபிடிக்கப்பட்டிருப்பதாக வானொலியில் கூறப்பட்டது;

வெள்ளைப்பிரம்பு

பார்வைஅற்றவர் செல்லும் பாதையில் முள்ளு உள்ள தடைகள் பள்ளங்கள் என்பவற்றை அறிந்துகொள்ளக் கூடியதாக நுண்ணலைகளை ஏற்படுத்தக்கூடிய கருவி ஒன்று வெள்ளைப் பிரம்பில் பொருத்தப்பட்டுள்ளதாம். தடையைஅறிந்து விலகிவேறு திசையில் நகர்த்த நுனியில் ஒரு சிறிய மோட்டரும் பொருத்தப்பட்டுள்ளதாம். இந்த நவீன வெள்ளைப் பிரம்பை நிலத்தில் தொடும்படி வைத்தாலே போதும் அது தானேஇயங்கி பார்வையற்றவரை நேராக செல்ல வழிகாட்டும். இது வெளவால்களைப்பார்த்தே கண்டுபிடிக்கப்பட்டதாம். இந்த வெளவால்கள் எதிரேஉள்ள தடை

(8 பக்கம் பார்க்க)

# கலாசார சீரழிவினைக் கட்டுப்படுத்தி தமிழ்ப் பண்பாட்டுடன் வாழ்வோம்

## ஒளிநாடா விநியோகஸ்தர் மத்தியில் இளம்பரிதி

(யாழ்ப்பாணம்)

'கலாசாரச் சீரழிவினைக் கட்டுப்படுத்தி எமக்கென்றொரு பண்பாட்டுடனும் சுய உரிமையுடனும் வாழ வேண்டும். இதற்குத் தடையாக உள்ள அனைத்துத் தீயசக்திகளையும்முறியடித்துவெற்றி' கொள்ள மக்களின் பங்களிப்புத் தேவை'

இவ்வாறு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

குடாநாட்டிலுள்ள ஒளிநாடா விநியோஸ்தர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று நேற்று முன்தினம் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற போது அவர்கள் மத்தியில் மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்தார்.

இக்கலந்துரையாடலில் விடுதலைப்புலிகளின் திரைப்பட வெளியீட்டுப் பிரிவுப்பொறுப்பாளர் ராதா, வன்னி திரைப்பட வெளியீட்டுப்பிரிவு முகாமையாளர் செல்வநேசன் ஆகியோரும்கலந்துகொண்டனர்.

இளம்பரிதி மேலும் அங்கு கருத்துத் தெரிவிக்கையில்;

சமூகத்தில் கலாசார சீரழிவினைஏற்படுத்துவதில்ஆபாச ஒளிநாடாக்களின பங்கு அதிகமாக உள்ளமை உணரப்பட்டுள்ளது. இவற்றின் விநியோகத்தைத் தடுப்பதும் முற்றாக அழிப்பதும் இன்று எம்முன்னுள்ள பாரிய கடமையாகும்.

ஆபாசப் படங்களின் திரையிடுகையும் மதுப்பயன்பாடும் இளைஞர்களைத்திசைதிருப்பி வருகினறன. இதன்மூலம் தீய சக்திகள் தமது இலக்குகளை அடைய நாம் காரணமாக இருக்க முடியாது. இளைஞர்களின் உணர்வுகளைத் திசை திருப்பி அவர்களின் உரிமைகளை மழுங்கடிப்பதே எதிரியின் திட்டமாகவுள்ளது.

எமது இனத்தை பாதாள உலகில் தள்ள முயற்சிக்கும் கொடிய சக்திகளின் வலைகளுக்குள் மக்கள் அகப்படக் கூடாது.

ஆபாசப்பட நாடாக்களை இனங்கண்டு அழிக்கும்வேலைகளை எமது இயக்கம் நேரடியாகவே மேற்கொண்டது. இனிமேல் இவ்வாறான தீய செயல்களில் ஈடுபடுபவர்கள் இனங்காணப்பட்டு மக்களால் தகுந்த தண்டனைக்குட்படுத்தப்படுவார்கள் என்றார்.

(ஷ-2)

# மனித உரிமைகள்பாசறை திருமலையில் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

மனித உரிமைகள் தொடர்பானபயிற்சிப் பாசறை ஒன்று நேற்று முன்தினம்திருகோணமலையில் உள்ள 'பாற்றர் சென்ரரில்' ஆரம்பமாகியது.

நான்கு தினங்கள் தொடர்ந்து இடம்பெறவுள்ள இப்பாசறையில் திருகோணமலை, மன்னார், வவுனியா, கிளிநொச்சி, மட்டக்களப்பு, யாழ்ப்பாணம் ஆகிய ஆறு மாவட்டங்களைச் சேர்ந்த குழுக்கள் பங்கு கொள்கின்றன.

ஒவ்வொரு மனிதனுக்குமுள்ள அடிப்படைஉரிமைகள் சம்பந்தமாகவும் அவற்றை தனிநபர்கள் விளக்க முற அறிந்து கொள்ள வேண்டுமென்பதை வலியுறுத்தியும் இப்பாசறை நிகழ்வு ஒழுங்குபடுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஷ-6)

# 24 கல்வி அதிகாரிகள் இம்மாதம் இந்தியாபயணம்

(கொழும்பு)

ஆசியஅபிவிருத்திவங்கியின் உதவித் திட்டத்தின் கீழ் செயற்படுத்தப்பட்டு வரும் இடைநிலைக் கல்வியை நவீன மயமாக்குவதுதொடர்பான மூன்று வாரகால பயிற்சியைப் பெற்றுக் கொள்வதற்காக நாடளாவிய ரீதியில் 24 கல்வித்துறை அதிகாரிகள் இந்தியா செல்லவுள்ளனர்.

கல்வி, மனிதவள, கலாசார அமைச்சினால் தெரிவு செய்யப்பட்டுள்ள இவர்கள் புதுடில்லியில்பயிற்சி பெறுவதற்காகஇம்மாதம் 14 ஆம் திகதி இந்தியாவிற்குப் புறப்படுவர்.

இப்பயிற்சிக்கு முல்லைத்தீவு வலயக் கல்விப்பணிப்பாளர் கே. குருகுலராஜா, துணுக்காய் வலயக்கல்விப் பணிப்பாளர் ஆர். தெய்வேந்திரன், சம்மாந்துறை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.ரி.ஏ. தௌபீக் ஆகியோர் வடக்கு-கிழக்கு மாகாணத்திலிருந்துதெரிவுசெய்யப்பட்டுள்ளனர். (உ-3)

# உற்சவம் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

உடுப்பிட்டி இமையாணன் ஸ்ரீமுருகன் ஆலய வருடாந்த உற்சவம் இன்று ஆரம்பமாகி தொடர்ந்து 16 தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 24 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறவுள்ளது.

(ஷ-2)

# தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசியல் கட்சியாக பதிவு செய்வதில் இழுபறி நிலை

(கொழும்பு)

தமிழர் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாக தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்வதற்கு ஆதரவும் அதேநேரம் எதிர்ப்பும் இருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தமிழர் தேசியக் கூட்டமைப்பை ஓர் அரசியல் கட்சியாகப் பதிவு செய்வதற்கு ரெலோவும், ஈ.பி.ஆர்.எல்.எப். உம் கோரிக்கைவிடுத்துள்ள போதும் தமிழர் விடுதலைக் கூட்டணியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியும் அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்துவருகின்றன.

தமிழர் தேசியக் கூட்டமைப்பை அரசியல் கட்சியாகப் பதிவு செய்வது தொடர்பாக நேற்று முன்தினம் நான்கு தமிழ்க் கட்சிகளும் சந்தித்துப் பேசியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

(வ)

# பஸ் கட்டணங்கள் குறையச் சந்தர்ப்பம்

(கொழும்பு)

நாட்டில் எரிபொருள்களின் விலைகள் குறைக்கப்பட்டிருப்பதனால் போக்குவரத்து கட்டணங்களும் குறைக்கப்பட வேண்டுமென போக்குவரத்து அமைச்சர் பியசோம உபாலி கேட்டுக்கொண்டுள்ளார்.

பஸ் கட்டணங்கள் எந்தளவு குறையவேண்டும் என்பது தொடர்பாக தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தற்போது ஆராய்ந்து வருகின்றது. (உ-8)

# விலைக்குறைப்பை கடைப்பிடிக்கத் தவறின் சட்ட 'நடவடிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் வரி நீக்கம், எரிபொருள்களின் விலைக் குறைப்பு என்பவற்றை நடைமுறையில் கொண்டுவருவதற்கான நடவடிக்கைகளை மிக விரைவாக மேற்கொள்ளுமாறு வர்த்தக பாவனையாளர் விவகாரங்கள் அமைச்சர் ரவி கருணாநாயக்கா நாட்டின் சகல வர்த்தகர்களுக்கும் உத்தரவிட்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு நிதியமைச்சர் கே. என் சொக்ஸி அத்தியாவசிய பொருள்களின் விலை ஏற்றத்தைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அரசாங்கம் மக்களுக்கு வழங்கவுள்ள நிவாரணம் தொடர்பாக அறிவித்திருந்தார்.

அமைச்சின் அறிவுறுத்தலுக்கு இணங்க நாட்டிலுள்ள மொத்த, சில்லறை வியாபாரிகள் வாழ்க்கைச் செலவுகளை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டுள்ளார்.

ஏற்கனவே கூட்டுறவு மொத்த விற்பனை நிலையங்கள் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளன. இதற்கான நடவடிக்கைகளை எடுக்காத வர்த்தகர் மீதும், நிறுவனங்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும்,

தற்போதைய நிலைமையை சாதகமாக பயன்படுத்தி சில வர்த்தகர்கள் அதிக இலாபம் ஈட்ட முனைகிறார்கள் எனவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

(உ-8)

# தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள் 14

## பகுதி I

ஆக்கம் – ''சாயிகல்வி வட்டம்''
கே.வி.குணசேகரம்
எம்.விக்னேஸ்வரன்

**பின்வரும் விவரணத்தை வாசித்து பொருத்தமான விடையின் இலக்கத்தைச் சுற்றி வட்டமிடுக.**

அபிராமி பழக்கடைக்குச் சென்றாள். அங்கே பலவிதமான பழங்கள் இருந்தன. அவை அபிராமியுடன் பேசத் தொடங்கின. ஒரு பழம் சொன்னது.

> நான் மிக மென்மையானவன். என்னிடம் உயிர்ச்சத்து A,B,C என்பன உண்டு. அத்துடன் பென்சிலினும் இருப்பதால் நோய்களைக் குணமாக்குவேன். வெளிநாட்டிலிருந்து வந்த என்னை மக்கள் விரும்புவது குறைவு.

(01) நான் யார்:- 1.மாம்பழம் 2. அப்பிள்பழம் 3. பப்பாப்பழம்.

இன்னொரு பழம் சொன்னது.

> என்னை விரும்பாதவர்கள் எவருமில்லை. நான் முக்கனிகளுள் முதன்மையானவன். என்னிடம் உயிர்ச்சத்துக்களுடன் தாதுப் பொருட்களும் உண்டு. எம்மில் பல இனங்கள் உண்டு. அதிகமாக எல்லோரினதும் வீட்டு முற்றங்களில் நான் நிற்பேன்.

(02) நான் :- 1. மாதுளம்பழம் 2. மாம்பழம் 3. கொய்யாப்பழம்.

வேறொரு பழம் சொன்னது.

> நான் பார்ப்பதற்குப் போர் வீரன் போன்றவன். எனக்கு மேலே கொத்தாக இலைகள் இருக்கும். விற்றமின்களும், தாதுப் பொருட்களும் என்னிடம் உண்டு. என்னை உண்பதால் உங்களுக்கு உடல் உறுதியும் உற்சாகமும் பெருகும்.

(03) நான் :- 1. பலாப்பழம் 2. அன்னாசிப்பழம் 3. வாழைப்பழம்.

**. கீழே தரப்பட்டுள்ள சொற்களுள் முதலாவது சொல் இரண்டாவது சொல்லுடன் தொடர்புடையது. மூன்றாவது சொல்லுக்குப் பொருத்தமான சொல்லின் கீழ்க் கோடிடுக.**


(04) அணில் - கீச்சிடும் எருமை - கத்தும், கதறும் முக்காரமிடும்
(05) ஆ - நிரை ஒளி - கீற்று, கற்றை, வெளிச்சம்
(06) பனை - தோப்பு நூல் - நிரை, குவியல், பந்து
(07) தென்னை - குரும்பை மா - வடு, பிஞ்சு, காய்

**பொருத்மான சொல்லை எழுதுக.**


(08) இரத்தத்திற்குக் குருதி போல ஈகைக்கு ...................... (கொடை, தானம்)
(09) அபாயத்திற்கு ஆபத்து போல அற்புதத்திற்கு......................(ஆனந்தம், புதுமை)
(10) தொடக்கத்திற்கு முடிவு போல தோல்விக்கு.........................(வெற்றி, சிறப்பு)

**கோலத்தை இனங்கண்டு வெற்றுக் கூடுகளை நிரப்புக.**


(11)




(12)




(13)





**ஒரு கலை விழாவின் நிகழ்ச்சிகளின் விபரம் அதற்கென ஒதுக்கப்பட்ட நேரம் பற்றிய விபரம் கீழே தரப்பட்டுள்ளது.**

* 6.00 மணிக்கு விழா ஆரம்பமாகும.
* கடவுள் வணக்கம் 5 நிமிடங்கள்
* நாடகம் 30 நிமிடங்கள்
* இசைக்கச்சேரி 45 நிமிடங்கள்
* தாள வாத்திய இசை 15 நிமிடங்கள்
* நடனம் குழு 30 நிமிடங்கள்
* நடனம் தனி 25 நிமிடங்கள்
* மேளக் கச்சேரி 60 நிமிடங்கள்


**சரியான விடையின் கீழ் கோடிடுக.**

(14) கலை நிகழ்ச்சிகள் இடம் பெற்ற கால அளவு :-
1. 3மணி 25 நிமி 2. 3மணி 30நிமி 3. 3மணி 45 நிமி
(15) முதலாவது நிகழ்வாகக் குழுநடனம் நடைபெற்றது. அது முடிவடைந்த நேரம்:-
1. 6.30 மணி 2. 6.35 மணி 3. 6.25 மணி
(16) இரண்டாவது நிகழ்வாக இசைக்கச்சேரி நடைபெற்றது. மூன்றாவது நிகழ்வாக தாளவாத்திய இசை நடைபெற்றது. தாளவாத்திய இசை தொடங்கிய நேரம்:- 1. 7.10 மணி 2. 7.35 மணி 3. 7.20 மணி
(17)) நாலாவது நிகழ்வாக மேளக் கச்சேரி நடைபெற்றது. அது முடிவடைந்ததும் கதிர்காமர் வீடு சென்றார். அவர் சென்ற நேரம்:-
1. 8.20 மணி 2. 9.10 மணி 3. 8.45 மணி


(18) இவ்வுருவில் 1/2 பங்குக்குரிய உருவின் கீழ்க் கோடிடுக.




(19) 2/3 பகுதியை நிழற்றுக.



(20) 1/6 பகுதி நிறம் தீட்டிய உருவின் கீழ்க் கோடிடுக.




பொருத்தமான எழுத்துகளை கீழேயுள்ள அறிவுறுத்தல்களுக்கமைய எழுதுக.





(21) உயிர்களின் போசனை..............................
(22) வீட்டின் மேற் பகுதி ................................
(23) காட்டில் வாழும் ஒரு மிருகம்..........................
(24) காற்றுவாங்கச் செல்லும் ஓர் இடத்தின் எல்லைப் பகுதி இங்கு சிப்பி, சோகி பொறுக்கலாம்.......................


(25)



(26)



(27)



முதலாவது உருவத்திற்கும் இரண்டாவது உருவத்திற்கும் தொடர்பு உண்டு. அதே போல் மூன்றாவது உருவத்தோடு தொடர்புடைய உருவத்தின் கீழ்க் கீறிடுக.

**ஒவ்வொரு நிரையிலும் மூன்று சொற்கள் ஒரு வகைகளில் ஒத்துள்ளன. இரு சொற்கள் வேறுபட்டன. வேறு பட்ட சொற்களின் கீழ்க் கீறிடுக.**

(28) குரக்கன், கத்தரி, தேங்காய், வெண்டி, புடோல்
(29) வீடு, மரம், தச்சன், பாடசாலை, பலகை
(30) ஏழு, ஆறு, ஐந்து, நான்கு, இரண்டு


கமலன் 100 மீற்றர் ஓட எடுத்த நேரம், நிமலன் 100 மீற்றர் ஓட எடுத்த நேரத்திலும் குறைவானது. அமலன் 100 மீற்றர் ஓட எடுத்த நேரம் கமலன் எடுத்த நேரத்திலும் குறைவானது.

(31) முதலாவதாக வருபவன் யார்?
(32) மூன்றாவதாக வருபவன் யார்?

கஜனி, ஜனனி, திவ்யா மூவரும் சித்திரத்தில் கெட்டிக்காரர்கள். ஜனனி, மாலதி, பிரபா இசையில் கெட்டிக்காரர்கள். மாலதி, கஜனி, ஜனனி மூவரும் நடனத்தில் கெட்டிக்காரர்கள்.

(33) மூன்றிலும் கெட்டிக்காரர் யார்?
(34) ரதியிடம் ஏழு பழங்கள் இருந்தன. குமாரிடம் ரதியை விடக் கூடுதலான பழங்கள் இருந்தன. ஐங்கரனிடம் குமாரிடம் உள்ளதை விடக் குறைவான பழங்கள் இருந்தன. மூவரிடமும் 24 பழங்கள் இருந்தால் குமாரிடமுள்ள பழங்கள் எத்தனை?
(35) எனது கடிகாரம் 12 நிமிடங்கள் பிந்தி ஓடுகின்றது நான் காரியாலயத்திற்குச் செல்ல 32 நிமிடங்கள் செல்லும். 8.30 மணிக்கு காரியாலயத்தில் நிற்க வேண்டுமானால் எனது கடிகாரநேரப்படி எத்தனை மணிக்குப் புறப்படல் வேண்டும்.

**விடுபட்ட இரு எழுத்துக்களைக் கண்டு பிடித்து எழுதவும்.**




(36) .........................................................
(37) .........................................................

**தாகமாய் அலைந்த நான் என்ற எழுத்துக்களை பின்வருமாறு எண்களால் எழுதலாம்.**
9, 7. 0. 3, 2, 6, 4, 5, 1, 8
பின்வரும் சொற்களை எண்ணில் எழுதுக.
(38) கலைந்த .........................
(39) மாதகல் .........................

**பின்வரும் எண்ணைச் சொற்களில் எழுதுக.**
(40) 7608 ........................

**குறிப்பு:– அன்பு மாணவச் செல்வங்களே! விடைகளை வேறு தாளில் எழுதி 16.07.2002 இற்கு முன் எமக்குக்கிடைக்கத்தக்கதாக அனுப்பி வைக்கவும்.**

**கல்விப் பகுதி**
வினாத்தாள் 14
"வலம்புரி",
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்.

மாணவர் முழுப்பெயர் :- ..............................................
சொந்த முகவரி :- ..............................................
கற்கும் பாடசாலை :- ..............................................

இப் படிவத்தை வெட்டி உங்கள் விடைத்தாள்களுடன் தவறாது இணைத்து அனுப்பி வைக்கவும்.

# இன்று ஒரு தகவல்

## எகிப்திய நாகரிகம்

நைல் நதியால் வளம் கொழிக்கும் எகிப்து நாட்டின் இயற்கை வளங்களின் காரணமாய் சுமார் 6000 ஆண்டுகளுக்கு முற்பட்ட காலத்திலேயே அங்கு நாகரிகம் வளர்ச்சியுற்றது. பண்டைய எகிப்தியர்கள் மரணத்திற்கு பிறகு வாழ்க்கை உண்டென நம்பினர். எனவே, அரசரும், பிரபுக்களும் இறந்தோரின் உடலுக்கு நறுமணப் பொருளிட்டு பாதுகாத்து அவற்றைக் கல்லறைகளில் அடக்கம் செய்தனர். இக்கல்லறைகளின் மீது கட்டப்பட்ட மாபெரும் கோபுரங்களே பிரமிட்டுகள் என அழைக்கப்படுகின்றன. கற்களாலேயே கட்டப்பட்ட இவை உலக அதிசயங்களிற் சிறந்தனவாகக் கருதப்பட்டு, மனிதனின் மாபெரும் சாதனையை உணர்த்துகின்றன. கீஸே என்னுமிடத்தில் குபூ எனும் அரசரால் கட்டப்பட்ட பிரமிட்டு 481 அடி உயரமுடையது. இதனை 1,00,000 அடிமைகள் 20 ஆண்டுகளில் கட்டிமுடித்தனராம். கி. மு. 3500 முதல் கி. மு. 2700 வரை உள்ளகாலம் எகிப்திய வரலாற்றில் 'பிரமிட்டுகள் காலம்' எனப்படுகிறது. இம் மாபெரும் பிரமிட்டுகளிலிருந்து சுமார் 5000 ஆண்டுகளுக்கு முற்பட்ட எகிப்தியர்களின் வாழ்க்கைமுறைகளைப் பற்றி அறிந்துகொள்ள முடிகிறது. ஒவ்வோர் பிரமிட்டின் அடித்தளத்திலுள்ள கல்லறையில் இறந்தோரின் உடல் கெடாமல் பக்குவப்படுத்தப்பட்டு, அதனோடு அவர்களது அடிமைகளும் பொன்னும் பிற பொருள்களும் சேர்த்து அடக்கம் செய்யப்பட்டன. கல்லறைச் சுவர்களின் மீது அழகிய ஓவியங்கள் தீட்டப்பட்டன. இவற்றிலிருந்துதான் அக்காலத்திய நாகரிகத்தின் மேன்மையை நாம் அறிய முடிகிறது.

### பொருளாதார நிலை

பிரமிட்டுகளின் ஓவியங்களிலிருந்து அக்கால மக்களின் தொழிற் திறனை அறியலாம். பண்டைய எகிப்து நாட்டில் திறமை மிக்க சிற்பிகள், தச்சர்கள், குயவர்கள், பொற்கொல்லர், நெசவாளர் போன்ற பல்வேறு தொழிலாளர்கள் வாழ்ந்தனர். அழகிய அணிகலன்கள், கண்ணாடிகள் சிங்கார வேலைப்பாடுகளமைந்த நாற்காலிகள், பாண்டங்கள் போன்ற எண்ணற்ற பொருட்கள் செய்யப்பட்டன. அழகிய பூங்காக்கள் அமைந்த வீடுகளில் பிரபுக்கள் வாழ்ந்தனர். கப்பல்கட்டும் தொழிலில் எகிப்தியர் முன்னேறியிருந்தனர் பொனீஷியா வரை எகிப்திய கப்பல்கள் வணிகம் செய்யச் சென்றன. பொதி சுமக்கக் கழுதைகள் பயன்படுத்தப்பட்டன.

### அரசியல் சமூக நிலை

எகிப்திய மன்னர்கள் பாரோக்கள் எனப்பட்டனர். இவர்கள் கடவுளரின் வழி வந்தவர்களெனக் கருதப்பட்டனர். உடன் பிறந்தாளை மணந்து கொள்ளும் பழக்கம் அரச குடும்பத்தினரிடையே நிலவிவந்தது. அரசர்கள் திறம்பட ஆண்டனர். வரிவிதிக்கும் பொருட்டு அவ்வப்போது மக்கள் தொகை கணக்கெடுக்கப்பட்டது. செங்கடலையும் நைல் நதியையும் இணைக்கும் கால்வாய் வெட்டப்பட்டது. குடியானவர்களிடமிருந்து விளைச்சலில் $\frac{3}{4}$ பாகம் தீர்வையாக வசூலிக்கப்பட்டது. அடிமை முறை மிகுதியாகக் காணப்பட்டது. இசை நாட்டியம் சதுரங்கமாடல் பந்தாடல் ஆகியவை மக்களின் சிலபொழுதுபோக்குகளாம்.

### சிற்பம்

பண்டைய எகிப்தில் சிற்பக் கலை மிக்க உயர் நிலைஎய்தியது. மரத்திலும், கல்லிலும் உருவச் சிலைகள் செதுக்கப்பட்டன. ஸ்விங்சு எனப்படும் மனிதமுகத்தையுடைய ஒரு சிங்க உருவம் அக்காலச்சிற்பத் திறனுக்கோர் எடுத்துக்காட்டாம். இதன் நீளம் 160 அடி, உயரம் 70 அடி, முகம் 33 அடி நீளம், 13 அடி 8 அங்குல அகலமும் உடையது தீப்ஸ் நகரில் உள்ள மாபெரும் கார்னாக் கோயில் எகிப்திய சிற்பம் ஓவியம் ஆகியவற்றின் மேன்மையை உணர்த்தும்.

### அறிவியல் வளர்ச்சியும் மதமும்

எகிப்தியர் கல்வி, இலக்கியம் விஞ்ஞானம், கணிதம் மருத்துவம்வான நூல்போன்ற கலைகளில் மிக்க முன்னேற்றம் எய்தியிருந்தனர். எழுதும் கலை இவர்களால் கண்டு பிடிக்கப்பட்டது. தொடக்கத்தில் சித்திர எழுத்துக்களும்பிறகு வேறு வகையான 24 எழுத்துக்களும் கையாளப்பட்டன. காகிதம், பேனாமை ஆகியவற்றின் பயனை இவர்கள் அறிந்திருந்தனர் பாபிரஸ் என்ற ஒருவகை நாணலிலிருந்து. காகிதத்தைச் செய்தனர். கிரகங்களின்சலனத்தை ஆராய்ந்து 365 நாட்கள் கொண்டது ஒரு ஆண்டு என நிர்ணயித்தனர். நோய்களுக்கும் பல்லேறு மருந்துகளைக் கண்டுபிடித்தனர். இறந்தோர் உடலைப் பக்குவப்படுத்தி கெடாமல் பாதுகாக்கும் கலையை அறிந் திருந்தனர். அறிவியல் நூல்களும் கதைகளும் பல எழுதப்பட்டன. எகிப்தியர் எண்ணற்ற தெய்வங்களை வழிபட்டனர். அவற்றுள் இரா, இசிஸ், ஓரஸ், ஆசிரிஸ் ஆகியவை பலரால் வழிபடப்பட்ட தெய்வங்களாகும். ஆவியின் அழியாத் தன்மையில் நம்பிக்கை வைக்கப்பட்டதால் இறந்தோர் ஆவியின் நலனுக்காகக் கற்பலகைகளில் கதைகளும் மந்திரங்களும் துதிகளும் எழுதப்பட்டு உடலோடு புதைக்கப்பட்டன. குருமார்களுக்குத் தனிச் சிறப்பும், உரிமைகளும் அளிக்கப்பட்டன.

நன்றி

சமூக அறிவு நூல்-10

பசடைமுகாம், பொலிஸ் நிலையம் என்பவற்றுடன்

# நெருங்கிய உறவைப் பேணுமாறு சிறைச்சாலைகளுக்குப் பணிப்பு

(கொழும்பு)

நாட்டிலுள்ள சகல சிறைச்சாலைகளும் அப்பகுதி பொலிஸ்நிலையம், இராணுவ முகாம் என்பவற்றுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேண வேண்டும் என உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன் அமரதுங்கா தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை அதிகாரிகளுடனான சந்திப்பொன்று அண்மையில் நடைபெற்றபோது அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது;

தங்காலைச் சம்பவங்கள் தொடர்பாக முழுமையான விசாரணை நடத்த தன் தலைமையில் மூவர் கொண்ட குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதாக தெரிவித்த அமைச்சர்,

நாட்டிலுள்ள 36 சிறைச்சாலைகளிலும் 28 விளக்கமறியல் சாலைகளிலும் நிலவும் பிரச்சினைகள் குறித்து, இன்றைய தினத்திற்கு முன்னதாக பூரண அறிக்கை ஒன்றினைத் தன்னிடம் சமர்ப்பிக்கும் படியும் சகல சிறைச்சாலை உத்தியோகத்தர்களையும் கேட்டுக்கொண்டார். (உ)

## ஆங்கிலதின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டக்கல்வி அலுவலகத்திற்குட்பட்டபாடசாலைகளுக்கிடையிலான ஆங்கில தின வாய்மொழி மூலப் போட்டிகள் இன்று காலை 9.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் இடம் பெறவுள்ளன. (உ-19)

## கட்டாக்காலி தொல்லை

(யாழ்ப்பாணம்)

உரும்பிராய், இணுவில் பகுதிகளில் கட்டாக்காலிமாடுகள் பயிர்செய் நிலங்களில் புகுந்து பயிர்களை நாசம் செய்து வருகின்றன, தோட்ட சொந்தக்காரர்கள் கால்நடை வளர்ப்போரிடம் இது பற்றி தெரிவித்தும் எதுவித பயனும் இல்லை என விவசாயிகள் விசனம் தெரிவித்துள்ளனர். (இ)

## மிதிவெடியில் கால் இழப்பு

(மந்திகை)

மிதிவெடியில் சிக்கி காலை இழந்த நிலையில் இளைஞர் ஒருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

பளை மாவில் கிருஷ்ணன் கோயிலுக்கு அண்மையில் கடந்த முதலாம் திகதி இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே இடத்தைச்சேர்ந்த குமாரவேல் விஜயகுமார் (வயது 19) என்பவரே தனது காலை இழந்தவராவார். (த-23)

## வாதுவ கப்பலில் நிவாரண அரிசி வந்தது

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டுமக்களின் உலர் உணவு நிவாரணத்துக்கான அரிசி, தூத்துக்குடியில் இருந்து வாதுவகப்பல் மூலம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு எடுத்துவரப்பட்டு அரிசி இறக்கும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

3 ஆயிரத்து 900 மெற்றிக் தொன்அரிசி தூத்துக்குடியில் இருந்து இவ்வாறு யாழ். குடாநாட்டு மக்களுக்கு நிவாரணத்திற்காகஎடுத்து வரப்பட்டுள்ளது. (உ-6)

## தமிழ்த்தின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையிலானவலயமட்ட தமிழ்த்தினப் போட்டிகள் நாளையும் நாளைமறுதினம் வெள்ளிக்கிழமையும் வேலணை சேர். வைத்தியலிங்கம் துரைசுவாமி மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

நாளை வியாழக்கிழமை எழுத்தாக்க நிகழ்ச்சிகளுடன் வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, கதை கூறல், தமிழறிவு, வினா விடைப் போட்டி, முஸ்லிம் நிகழ்ச்சி ஆகியனவும் மறுநாள் வெள்ளிக்கிழமை ஏனைய கலைத்திறன் போட்டிகளும் நடைபெறவுள்ளன. (உ-19)

# யாழிலிருந்து உயரின கால்நடைகள் வன்னிக்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்திலிருந்து 30 உயரினமாடுகளும்ஒருதொகுதி உயரின ஆடுகளும் தரைப் பாதையூடாக வன்னிக்குஎடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் முயற்சியில் வன்னிப் பெரு நிலப்பரப்பில் விலங்குவேளாண்மையை விரிவுபடுத்தும் நோக்குடன் இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ஷ-19)

# எரிபொருள் விலைகுறைப்பு அடுத்த வாரம்முதல் அமுல்

(கொழும்பு)

எரிபொருள்களின் விலைக் குறைப்பு அடுத்த வாரத்தில் இருந்தே அமுல்படுத்தப்படும் என இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டீசல் ஒரு லீற்றருக்கு 2 ரூபா 50சதத்தாலும் பெற்றோல் லீற்றருக்கு 6 ரூபாவாலும் குறைக்கப்படும் என நிதியமைச்சர் சொக்ஸி அண்மையில் மக்களுக்கு ஆற்றிய உரையில் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாகஇலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் நேற்றுமுன்தினம்விடுத்த அறிக்கையிலேயேமேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

# திருமலைஉயிர்ப்பூட்டல்குழு 15ஆம் திகதி யாழ் வருகை

(யாழ்ப்பாணம்)

கியூடெக் நிறுவனத்தின் அனுசரணையுடன்திருகோணமலையிலிருந்துஉயிர்ப்பூட்டல் குழு ஒன்று எதிர்வரும் 15ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகை தரவுள்ளது.

30பேர் அங்கம்வகிக்கும்இக் குழுவினர் யாழ்ப்பாணத்தில் மூன்று தினங்கள் தங்கியிருப்பர்.

இவர்கள் இங்கு தங்கியிருக்கும் காலப்பகுதியில் பொது மக்களைச் சந்தித்துச் சமாதானத்தின் தேவைபற்றியும், சகோதரத்துவ உறவுகளை வளர்த்துக்கொள்வதுதொடர்பாகவும் அவர்களுடன்ஆராயவுள்ளனர்.

பாஷையூர், சாவற்காடு, இளவாலை போன்ற பகுதிகளில் இக்குழுவினரின் உயிர்ப்பூட்டல் செயற்பாடுகள்இடம் பெறவுள்ளன. (ஷ-6)

# ஒளிநாடா விநியோகஸ்தர் சங்கம் அங்குரார்ப்பணம்

(யாழ்ப்பாணம்)

ஒளிநாடா மற்றும் ஒளித் தட்டுகள் மூலமாக திரைப்படம் உள்ளிட்ட பொழுது போக்கு அம்சங்களை விநியோகம் செய்வோருக்கான கலந்துரையாடல் நேற்று முன்தினம் விடுதலைப்புலிகள் திரைப்பட வெளியீட்டுப் பிரிவைச் சேர்ந்த ராதாதலைமையில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற போது விநியோகஸ்தர்களுக்கான சங்கமொன்று அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டது,

இச் சங்கத்தின் தலைவாராக தி.ஜீவராசாவும், செயலாளராக செ.சண்முகதாஸும், பொருளாளராக செ.பரமானந்தமும் தெரிவு செய்யப்பட்டனர்.

இனிவருங்காலங்களில் ஒளிநாடா விநியோகஸ்தர் தொடர்பான பிரச்சினைகளை இச்சங்கம் கையாளும் என்று இக்கலந்துரையாடலில் தெரிவிக்கப்பட்டது. (ஷ-2)

# காரைநகரில் இருந்து விறகு எடுத்துச் செல்ல கடற்படை புதியநடைமுறை

(காரைநகர்)

காரைநகர் பகுதியில் இருந்து மரங்கள், விறகுகள் தறித்து வெளியிடங்களுக்கு ஏற்றிச் செல்வதற்கு கடற்படையினர் புதிய நடைமுறைகளை விதித்துள்ளனர்.

புதிய நடைமுறையின் பிரகாரம் காரைநகரில் இருந்து வெளியிடங்களுக்கு விறகு, மரங்கள் ஏற்றுவதாயின் கிராமசேவையாளர், பிரதேச செயலர், மக்கள் குழுத்தலைவர், கடற்படை அதிகாரி போன்றவர்களிடம் அனுமதி பெற்றே கொண்டு செல்ல முடியும்,

இவ்வாறு அனுமதிபெறாது விறகு ஏற்றப்பட்ட வாகனங்கள் கடந்த சிலநாட்களாக பொன்னாலையில் வைத்து தடுத்து வைக்கப்பட்டு திருப்பி அனுப்பப்படுகின்றது. (உ-246)

# காட்டுப் பகுதியில் எரிந்த நிலையில் சடலம் மீட்பு

(கொழும்பு)

ஹபரண காட்டுப்பகுதியில் வாகனமொன்றுடன் எரிக்கப்பட்ட நிலையில் சடலமொன்றைபொலிஸார்கண்டு பிடித்துள்ளனர்.

இனம் தெரியாத குழுவொன்று மாத்தளைப் பகுதியைச் சேர்ந்த ஒருவரிடம்இவ்வாகனத்தை வாடகைக்கு அமர்த்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சடலம் இன்னமும்அடையாளம் காணப்படவில்லை. (உ-8)

# தீவகத்தில் கடற்படையின் அத்துமீறல்கள்

# கட்டுமீறாது பார்த்துக்கொள்ள வேண்டும்

## கண்காணிப்புகுழுவுக்கு தீவகமக்கள் நலன் காப்பகம் கடிதம்

(யாழ்ப்பாணம்)

எமது தீவக பிரதேசம்இராணுவப் பிரதேசம்என்ற போர்வையோடு இலங்கை கடற்படையினரினால் சுவீகரிக்கப்படும் திட்டத்தை ஏற்கனவே யுத்த நிறுத்தக்கண்காணிப்புக் குழுவினராகிய தங்களிற்கு அறிவித்ததன் மூலம் எமது தீவக பிரதேசத்தை காத்துக் கொண்டதோடு மட்டுமல்லாது கடற்படையினரின் சதிச்செயலை எல்லோருமே அறிய முடிந்தது.

இதனால் ஆத்திரமுற்ற கடற் படையினர் தாம் அப்படியான நடவடிக்கையில் ஈடுபடாதவர்களைப் போல் காட்டிக்கொள்ளும் பொருட்டு சோதனைச்சாவடிகளை அகற்றிவிட்டு தமது நடவடிக்கைகளை மக்களுக்கெதிராக திருப்பியுள்ளனர். தமது நயவஞ்சகப் போக்கின் உச்ச கட்டத்தில் தமது அதிகாரங்களை துஷ்பிரயோகம் செய்கின்றனர்.

தீவகத்தில் கட்டின்றித் தொடரும் கடற்படையினரின் அடாவடித்தனங்கள் குறித்தும் அவற்றைக் கட்டுப்படுத்துவதன் அவசியத்தை வலியுறுத்தியும் தீவக மக்கள் நலன் காப்பகம் யாழ்ப்பாண யுத்தநிறுத்தக்கண்காணிப்புக் குழுவுக்கு அனுப்பிவைத்துள்ளகடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது அக்கடிதவிபரம் வருமாறு.

எனவே கடற்படையினரின் காடைத்தனங்கள் காட்டாற்று வெள்ளமாகாதுஇருக்கவும் கடந்த காலங்களாக அவர்களின் அடாவடித்தனங்களால்செய்வதறியாதுபீதிக்கு உட்பட்டிருக்கும் தீவக மக்கள் ஒரு சுபீட்சம் நிறைந்தநிம்மதியான வாழ்வைக்கட்டியெழுப்புவதற்கு அரசாங்கத்துடனும் சம்பந்தப்பட்டவர்களுடனும் பேச்சு நடத்தி உரிய தீர்வை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினராகிய தாங்கள் பெற்றுத் தருவீர்கள் என்ற அயராத நம்பிக்கையுடன் மீண்டுமொருமுறை எமக்கு ஏற்பட்ட அசௌகரியங்களை அறிக்கையாக தங்களிடம் சமர்ப்பிக்கின்றோம்.

கடற்படையினரின் திட்டமிட்ட அடாவடித்தனங்களான அண்மைக்காலசெயற்பாடுகள்.

பிரதான போக்குவரத்துப் பாதை மூடப்பட்டுதீவகத்தில் இயங்கும் ஒரேயொருபிரதான பாடசாலையின் மாணவர்களின் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளிற்கு இடையூறு விளைவித்தும் விவசாயகாணிகளைஅத்துமீறி அழித்துஅரண்கள் அமைத்தும் கடற்படையினர் புரியும்காடைத்தனத்தின் மூலம் புரிந்துணர்வு ஒப்பந்தம் சீர்குலைக்கப்பட்டுள்ளது.

வேலணை வங்களாவடிச் சந்தியிலிருந்து யாழ். சேர் வைத்திலிங்கம் துரைச்சுவாமி மத்திய மகாவித்தியாலயம் அமைந்துள்ள பகுதியினூடாக செல்லும் பிரதானபாதைபுளியங்கூடல் சந்தியூடாக ஊர்காவற்றுறைக்கு செல்கிறது. இவ்வீதி புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின் பொதுமக்கள் பாவனையின் பொருட்டு திறந்து விடப்பட்டது. தற்போது 01.07.2002 இல் இருந்து இப்பிரதான வீதிகளின் போக்குவரத்துக்கு தடையிடப்பட்டு இப்பகுதி பலமான பாதுகாப்பு அரண்கள் மண்மேடுகள் மூலம் அமைக்கப்பெறுகின்றது.

இப்பாதை மூடப்பட்டு அன்றாட சீவியத்துக்கு விவசாயத்தையே பிரதான தொழிலாக நம்பியிருந்த ஏழை விவசாயிகளின் நிலங்களை சுவீகரித்து அந்தநிலத்தில் புதியவீதி ஒன்றைஉருவாக்கி அந்த பாதையூடாக மக்கள் சென்று வர நிர்ப்பந்திக்கப்படுகின்றனர்.

இவ்வாறே சிற்பனை முருகமூர்த்திகோவிலின் வீதி, பள்ளம்புலம், மைலப்புலவீதிகள் முற்றாக பொதுமக்களின்பாவனைக்கு தடை செய்யப்பட்டுள்ளன.

மேலும் பொதுவாக எமது மாணவர்கள் சுதந்திரமாக ஒரு சூழலில் கல்விச் செயற்பாட்டை மேற்கொள்ளவே பெற்றோர்கள், மாணவர்கள் விரும்புகிறார்கள். இப் பாடசாலை விடுதியில் புங்குடுதீவு, நெடுந்தீவு அனலைதீவு, எழுவைதீவு காரைநகர், மண்டைதீவு போன்ற இடங்களில் உள்ள மாணவர்கள் விடுதியில் தங்கிப் படித்து வந்த உரிமை கடற்படையினரால் இன்று மறுக்கப்பட்டுள்ளது.

இப்படியான மக்களின் அறிவியல், வாழ்வியல் இடர்பாடுகளை வேண்டுமென்றே பகுத்து எமது பொருளாதாரம் மற்றும் எதிர்காலசந்ததிகளை வேருடன் அறுத்தெறியவே கடற்படையினரால்தீட்டப்பட்டசதிச் செயல் என தீவக மக்கள் கருதுகின்றனர். எனவே இவற்றுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் தீவக மக்களாகிய நாம் ''மேற்கண்ட கடற்படையினரின் அடாவடித்தனம் களையப்பட்டு நல்லதொரு தீர்வை சம்பந்தப் பட்டவர்களிடமும் அரசுடனும் பேசி பெற்றுத் தருமாறு கோரிக்கையை முன்வைத்து ஓரிரு தினங்களில் திரட்டப்பட்ட கையெழுத்துக்களுடன் தங்களிடம் சமர்ப்பித்து நல்லதொரு தீர்வுக்கு ஒற்றுமைப்பாட்டுடன் கை கோர்த்து நிற்கிறோம்.

எமது கோரிக்கை நிறைவுறாத பட்சத்தில் மக்கள் சக்தி மாபெரும் சக்தி என்பதற்கேற்ப வெகுஜனப் போராட்டத்தில் குதிக்கப்படுவது விரும்பத்தகாத செயல்களுக்கே அத்திபாரமிடும். எனவே விரக்தியின் உச்சியில் நிற்கும் எமது மக்களின் ஏக்கத்திற்கு நல்லதொரு தீர்வை தாங்கள் உரியவர்களிடம் பெற்றுத் தருவீர்கள் என்ற நம்பிக்கையுடன் காத்து நிற்கிறோம் என்றுள்ளது. (உ)

## ஒகஸ்ட் 18-24 வரை பலப்பிட்டியவில் 6 ஆவது தேசிய ஜம்போரி

(கொழும்பு)

இலங்கைச் சாரணர் சங்கத்தின் 6 ஆவது தேசியஜம்போரி நிகழ்வு அடுத்தமாதம் 18 ஆம் திகதிமுதல் 24 ஆம் திகதி வரை பலப்பிட்டிய ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

சகல சாரணர் மாவட்டங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் 8 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சாரணர்கள் இவ் ஜம்போரி நிகழ்வில் கலந்துகொள்ளவுள்ளனர்.

சாரணர் விளையாட்டுக்கள், சுற்றுலா உள்ளிட்ட பல விநோத விளையாட்டுகள் ஜம்போரியில் இடம்பெறவுள்ளன. (உ-3)

## 'ஹெபார்ட்'ரக உயரின கோழிகள் விநியோகம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் 'ஹெபார்ட்'ரக உயரின கோழிக்குஞ்சுகள்முதன்முறையாக கால்நடை வளர்ப்பாளர்களுக்கு, கால்நடை வளர்ப்புக் கூட்டுறவுச் சங்கங்களின் ஊடாக விநியோகிக்கப்படவுள்ளன.

கிராம மட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட கால்நடைவளர்ப்பாளர்களுக்கு இம்மாதம் 20 ஆம் திகதியிலிருந்து இக் குஞ்சுகள் விநியோகம் செய்யப்படவிருப்பதாக கால்நடைஉதவிப்பணிப் பணிப்பாளர் பொ.இராமநாதன் தெரிவித்தார்.

ஹெபார்ட் ரக கோழிகள் சர்வதேச ரீதியாக பிரசித்தி பெற்ற இனமாகும். அதிக உற்பத்தித்திறன் கூடியஇவற்றின் தாயகம் பிரான்ஸ் என்பது குறிப்பிடத்தக்கது. (ஷ-19)

## மருதங்கேணி கோட்டத்தில் கடந்த வாரம் முதல் 3 பாடசாலைகள் ஆரம்பம்

(செம்பியன்பற்று)

மருதங்கேணி கல்விக்கோட்டத்தில் கடந்தவாரம் முதல், மூன்று பாடசாலைகள் இயங்கத் தொடங்கியுள்ளன.

மாமுனை அ. த. க. பாடசாலை, தாளையடி றோ. க. த. க. பாடசாலை, வெற்றிலைக்கேணி பரமேஸ்வரா வித்தியாலயம் ஆகியபாடசாலைகளே புதிதாக தமது செயற்பாடுகளை ஆரம்பித்துள்ளன.

எனினும் தாளையடி றோ. க. த. க. பாடசாலை மருதங்கேணி இ. த. க. பாடசாலையுடனும், மாமுனை அ. த. க. பாடசாலை செம்பியன்பற்று அ. த. க. பாடசாலையுடனும் இணைந்து இயங்கி வருவதால், மாமுனை தாளையடி பிரதேசங்களைச்சேர்ந்த மாணவர்கள் நீண்டதூரம் சென்றே கல்விபயிலவேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இப்பிரதேசங்களில் அதிகளவு மாணவர்கள் இருந்தும் சொந்தஇடத்தில் இப்பாடசாலைகளைஇயக்க நடவடிக்கை எடுக்காதது குறித்து பெற்றோர் விசனம் தெரிவித்துள்ளனர். (ஷ-42)

## வைத்திய சேவையால் கல்வி செயற்பாடுகள் பாதிப்பு

(செம்பியன்பற்று)

மருதங்கேணி இ. த. க. பாடசாலையில் இடம்பெற்று வரும் வைத்திய சேவையால் கல்விச் செயற்பாடுகள் பாதிப்படைந்து வருவதாக பாடசாலை வட்டாரங்கள் கவலை வெளியிட்டுள்ளன.

வடமராட்சி கிழக்கில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு மந்திகை ஆதார வைத்தியசாலையைச் சேர்ந்த வைத்தியர் குழு ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் இப்பாடசாலையில் வைத்து வைத்திய சேவையை வழங்கி வருகிறது.

இதன் காரணமாக தமது செயற்பாடுகளை திருப்திகரமாக மேற்கொள்ள முடியாதுள்ளதாகவும் மாணவர்களின் கற்றல் செயற்பாடுகளில் தடங்கல் ஏற்படுவதாகவும் மேற்படி பாடசாலை வட்டாரங்கள் கவலை தெரிவித்துள்ளன.

இதற்குப் பொருத்தமான இடமொன்றைத் தெரிவு செய்வதில் அதிகாரிகள் அக்கறை காட்டவில்லை என்றும் அப்பாடசாலை சமூகத்தினால் விசனம் தெரிவிக்கப்படுகிறது. (ஷ-42)

## இராசி பலன்

10.7.2002
(ஆனி 26, புதன்)
அமாவாசை பி.ப. 4.17வரை
திருவாதிரை மு.ப.9.24வரை
ராகுகாலம்-11.58-1.28
நல்லநேரம்-4.28-5.58
அமாவாசை விரதம்

**மேடம்**
தெய்வஅனுகூலம், உறவினர்சந்திப்பு, தனலாபம், தொழில்நன்மை

**இடபம்**
மாதர்நட்பு, காரியதாமதம், மனக்குழப்பம், உஷ்ண வியாதி

**மிதுனம்**
சயனசுகம், விருந்துண்ணல், நண்பர்கள்சந்திப்பு, முயற்சிகைகூடும்

**கடகம்**
நண்பர்கள் விரோதம், காரியஅலைச்சல், பொருள் விரயம், சுரவியாதி

**சிங்கம்**
கீர்த்தி, தொழில்லாபம், நல்ல மனைவாசம், காரிய அனுகூலம்

**கன்னி**
அதிகாரிகள் ஆதரவு, தொழில் முன்னேற்றம் முயற்சி கைகூடும், இலட்சுமி கரம்

**துலாம்**
காரியதாமதம், தந்தைவழி உறவு, துணிந்த செயற்பாடு, வயிற்றுக்கோளாறு

**விருச்சிகம்**
எதிர்பாராத மனஸ்தாபம், முயற்சிதடங்கல், பிரயாண பயம், போசனசுகம்

**தனுசு**
சென்றஇடத்தில் செல்வாக்கு, தொழில்விருத்தி, கலந்துரையாடல், போசன சுகம்

**மகரம்**
நோய் குணமடைதல், பகைவர் நேசம், குடும்பத்தில் குதூகலம், முயற்சிபலிதம்

**கும்பம்**
சொத்துப்பிணக்கு, ரோக நிலை, எதிர்பாராதநன்மை, காரியதாமதம்

**மீனம்**
உடல்சோர்வு, முயற்சி தாமதம், தொழில்கஷ்டம், தந்தைவழிஉறவு

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

## குருபூசையும் திருவாசகம் முற்றோதலும்

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தில் ஸ்ரீ மாணிக்க வாசக சுவாமிகள் குருபூசையும் திருவாசக முற்றோதலும் எதிர்வரும் 13 ஆம் திகதி சனிக்கிழமைநடைபெறவுள்ளது. (உ)

## நுளம்பு வலைகள் விநியோகம்

(செம்பியன்பற்று)

வடமராட்சி கிழக்கில் மீளக் குடியமர்ந்த குடும்பங்களுக்கு நுளம்புவலைகள் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

மக்கள் மீளக் குடியமர்ந்த பிரதேசமான கட்டைக்காடு முதல் மாமுனை வரையான பகுதியில் மலேரியா காய்ச்சலின் தாக்கம் அதிகளவு உணரப்பட்டதை அடுத்தே நுளம்பு வலை வழங்கும் நடவடிக்கையை அப்பகுதி சுகாதாரப் பகுதி மேற்கொண்டுள்ளது.

மருதங்கேணி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் எஸ்.ஈசன் தலைமையில் இப் பணியில் ஈடுபட்டு வரும் குழுவில் அப்பகுதி கிராம உத்தியோகத்தர்களும் அங்கம் வகிக்கின்றனர். (ஷ-42)

## சுகாதார நிலைமைகளை அறிவு

(காரைநகர்)

காரைநகரில் இருந்து இடம்பெயர்ந்து மீளக்குடியமர்வதற்குரிய அடிப்படை வசதிகள் இல்லாது பாலாவோடை அ.மி.த.க. பாடசாலையில் தங்கவைக்கப்பட்டிருக்கும் மக்களின் சுகாதார நிலைமைகளை யாழ்.மாவட்ட குடும்ப நல பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். கந்தசாமி நேரில்சென்று பார்வையிட்டுள்ளார்.

இங்கு தங்கியுள்ள குழந்தைகள் மற்றும் கர்ப்பிணித் தாய்மாரின் சுகாதாரம் தொடர்பாக ஆராய்ந்த அவர், சுகாதார வசதிகளை ஏற்படுத்துவதற்கு மேற்கொள்ள வேண்டிய நடைமுறைகள் குறித்து முகாம் பொறுப்பாளருக்கு எடுத்துக் கூறியுள்ளார். (ஷ-246)

---

### பேராசிரியர்

தேர்விற் சித்தியடைந்து திரும்பி வருவதை அறிந்து ஔவசியர் அவனை மருமகனாக எடுப்பதற்குக் கொழும்புக்கு வந்து, நாகரிக வாழ்க்கை நடத்துவதையும் ஔவசியரின் மருமகன் ஔவசியரின் மகளை முடியாது ஔவசியரின் தம்பியின் மகளை முடிப்பதையும். பொருள் பொருளல்ல என்பதை நிலைநாட்டுவதை இந் நாடகம் சித்திரிக்கிறது.

தவறான எண்ணம்

இலங்கையின் அரசியல்நிலைமையை அங்கதச் சுவையுடன் பேச்சுத் தமிழில் வெளியிடும் இந்த நாடகக்கதை நாகபுரி எனும் கற்பனை நகரில் நடைபெறுகிறது. அந்நகரில் வசிக்கும் அப்புக்காத்து வச்சிர நாகர், நண்பர் முடிநாகர், மகள் பரிமளநாகி, மருமகன் குமாரநாகன், புதுமைப் பெண்கள் சுந்தரநாகி, வசந்தநாகி, தனித்தனி அரசியற் கொள்கைகொண்ட பாலநாகர், புலிக்குட்டிநாகர், அங்கதநாகர் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்கள், இப் பாத்திரங்களின் திறமையான இயக்கமூலம் பல அரசியல் சிக்கல்கள் உருவாக்கப்படுகின்றன. பதவி, அதிகாரம், மதிப்பு, நாட்டாண்மை முதலியவற்றினையும் சாகச அரசியலிலே திருக்கூத்துக்களை நடத்தும் அரசியல்வாதிகளின் போக்குகளையும் கட்சி ஆதரவாளர்களிடையே ஏற்படும் சச்சரவுகளையும் இந்நாடகம் சித்திரிக்கிறது.

(தொடரும்)

# தரம் 05 புலமைப் பரிசில் முன்னோடி வினாத்தாள் 13 பகுதி II இல் கூடிய புள்ளிகளைப் பெற்றவர்களின் விபரம்.

01. சி.சீராளன், யாழ்ப்பாணக் கல்லூரி.
02. பி.டியோனிஸ்கூரே, மானிப்பாய் சென்ற் ஆன்ஸ்.
03. பா.ஸ்ரீகுகன், யாழ்ப்பாணக் கல்லூரி.
04. செ.அனுதர்சன், நெ.மெ.மி.த.க.பாடசாலை.
05. ஸ்ரீ.தருசன், யாழ்.இந்து ஆரம்பப் பாடசாலை.
06. பி.யோபிதா, வல்வை சிவகுரு வித்தியாசாலை.
07. பு.கோபிநாத், வல்வை சிவகுரு வித்தியாசாலை.
08. அ.துளசி, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
09. ச.பிரவீனா, கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
10. க.கஜீபராஜ், வியாவிளான் மத்திய மகா வித்தியாலயம்.
11. ப.ஆரணி, தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை.
12. மு.குணதரன், துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
13. தி.நகுல்ராஜ், கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை.
14. ரா.திவாகர், வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
15. சோ. சிந்துகேயன், யாழ் மத்திய கல்லூரி
16. பி.நந்தினி, வ.ம.ம.வித்தியாலயம்.
17. கே.சந்திரகுமாரி, வல்வை.ம.க.வித்தியாலயம்.
18. ற.பரந்தாமன், வல்வை சிவகுரு வித்தியாசாலை.
19. பி.ஜோதிகா, வல்வை சிவகுரு வித்தியாசாலை.
20. பு.வினோஜா, வல்வெட்டி விநாயகர் வித்தியாலயம்.
21. ஜெ.கோவர்க், யாழ் மத்திய கல்லூரி.
22. இ.மதனிகா, வல்வெட்டி விநாயகர் வித்தியாசாலை.
23. தெ.விருஜன், உடுவில் முருக மூர்த்தி வித்தியாசாலை.
24. செ.ஜெகப்பிரியா, சென்யோண் பொஸ்கோ.
25. ப.சதாசினி, வல்வை சிவகுரு வித்தியாசாலை.
26. ச.சுகிர்தன், யாழ் மத்திய கல்லூரி.
27. சி.மயூரன், முத்துத்தம்பி மகா வித்தியாலயம்.
28. நி.பகீகரன், சங்குவேலி அ.த.க.பாடசாலை.
29. கு.டினுஸ்ரன், யாழ் மத்திய கல்லூரி.
30. ச.யதுகுலன், மானிப்பாய் மெமோறியல் ஆங்கிலப் பாடசாலை.
31. த.வராகினி, கொக்குவில், சீ.சீ.த.க.பாடசாலை.
32. செ.பிரியங்கா, திருக்குடும்பக் கன்னியர் மடம்.
33. ரா. றொசாணி சந்திரிக்கா, உடுவில் மகளிர் கல்லூரி.
34. வி.தீபன்ராஜ், ஆனைப்பந்தி மெ.மி.வி.
35. ச.விஷ்வரூபன், வல்வை மகளிர் வித்தியாலயம்.
36. க.பிரதீபன், யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை.
37. நா.பிரகாஷ், காசிப்பிள்ளை வித்தியாலயம்.
38. செ.கோபிகா, கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்.
39. ஜெ.தட்சாயினி, சங்குவேலி அ.த.க.பாடசாலை.
40. த.ஜனந்தினி, இந்து ஆரம்பப் பாடசாலை.
41. த.வஜீதா, விவேகானந்தா வித்தியாசாலை.
42. த.அபராஜினி, முத்துக்குமாரசாமி வித்தியாலயம்.
43. வி.கிரிஜா, நீர்வேலி சீ.சீ.த.க.பாடசாலை.
44. வ.செல்வக்குமரன், கைதடி குருசாமி வித்தியாலயம்.
45. க.கஸ்தூரி, கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலை.
46. ஞா.சதீஸ்குமார், மத்திய கல்லூரி.
47. து.பிரியந்தி, கொக்குவில் ஸ்ரீஞான பண்டித வித்தியாசாலை.
48. இ.கிரிசாந்தன், கரவெட்டி மெ.மி.த.க.பாடசாலை.
49. வி.நிரோசன், கரந்தன், இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
50. எஸ்.ஜோயன்ஸ், சென் பத்திரிசியார் கல்லூரி.
51. ம.நிகிந்தன், மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயம்.
52. தி.வசீகரன், யாழ் இந்து ஆரம்பப் பாடசாலை.
53. பா.சண்முகப்பிரியா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
54. ப.லக்சனா, சங்குவேலி அ.த.க.பாடசாலை.
55. ந. செந்தூரன், யாழ்ற்ரன் கல்லூரி.
56. வ.லக்ஸ்மன், மானிப்பாய் சென் ஆன்ஸ்.
57. ந.கௌசிகா, தும்பளை சிவப்பிரகாச ம.வி.
58. வா.நிலக்ஷி, புனித ஜோண் பெஸ்கோ வித்தியாலயம்.
59. இ.துவாரகா, கொக்குவில் ஸ்ரீ ஞான பண்டித வித்தியாசாலை.
60. உ.தர்சன், யாழ் மத்திய கல்லூரி.
61. ஜோ.விமல்ராஜ், யாழ் மத்திய கல்லூரி.
62. இ.சங்கீதா, சித்தன்கேணி ஸ்ரீகணேசா வித்தியாலயம்.
63. கு.லேகா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
64. தி.ஜிந்தூரகன், சென்ஜோண் பொஸ்கோ.
65. எ.அனந்தசயனன், கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம்.
66. ச.கணேஸ்பரன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
67. ச.ஏஞ்சலின், நிவேதிகா உடுவில் மகளிர் கல்லூரி.
68. ப.சோபியா, நெ.மெ.த.க.பாடசாலை.
69. அ.கார்த்திகன், புனித பொஸ்கோ.
70. கு.தமிழ்மதி, மேலைப்புலோலி சைவப்பிரகாச வித்தியாசாலை.
71. த.கிஷா, அச்சுவேலி, மத்திய கல்லூரி.
72. ஸ்ரீ.சரன்யன், உரும்பிராய் சைவத் தமிழ் வித்தியாலயம்.
73. சு.சுரேசினி, வண்ணை ஸ்ரீ வைத்திலிங்கம் வித்தியாலயம்.
74. க.கீர்த்திகா, துன்னாலை காசிநாதர் வித்தியாலயம்.
75. கு.சுமங்கலி, உடுப்பிட்டி சைவப் பிரகாச வித்தியாசாலை.
76. ந.மாதங்கி, புனித ஜோண் பொஸ்கோ.
77. சி.கீர்த்திகா, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி.
78. சி.சியாமளா, ஏழாலை மகா வித்தியாலயம்.
79. ஜீ.கொண்சன், கற்கோவளம் மெ.மி.த.க.பாடசாலை.
80. கா.திவேஜன், ஏழாலை மகா வித்தியாலயம்.
81. எம்.ஜோண் பிரசாந், சென் ஜோண்ஸ் கல்லூரி.
82. சி.தபேஸ், ஏழாலை மகா வித்தியாலயம்.
83. செ.யாசோதா, அராலி முருக மூர்த்தி வித்தியாசாலை.
84. து.துவாரகன், ஏழாலை மகா வித்தியாலயம்.
85. ஆ.திறோஜா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
86. ப.மோகன்றாஜ், ஏழாலை மகா வித்தியாலயம்.
87. மு.கிசேன், நாவாந்துறை றோமன் கத்தோலிக்க வித்தியாலயம்.
88. ஆ.நிறோஜா, உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.
89. கு.டினிஸ்ரன், ஏழாலை மகா வித்தியாலயம்.
90. மா.சிவசுதன், கோண்டாவில் சீ.சீ.த.க.பாடசதலை.
91. சு.தசாங்கன், ஏழாலை மகா வித்தியாலயம்.
92. ந.திருமாறன், உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரி.
93. ஆ. சயந்தினி, ஏழாலை மகா வித்தியாலயம்.
94. செ.சரனியா, ஏழாலை மகா வித்தியாலயம்.
95. சி.சிவராம், சென்ஜோன்ஸ் கல்லூரி.
96. ஜோ.கஜீந்தன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
97. ஜெ.நிவிதா, இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.
98. ச.கீர்த்திகா, உடுவில் மகளிர் கல்லூரி.
99. சிந்துயன், ஏழாலை மகா வித்தியாலயம்.
100. ச.சமீரா உரும்பிராய் சைவத்தமிழ் வித்தியாலயம்.
101. பா.பிறோஷியா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
102. வா.நிலானி, உரும்பிராய றோ.க.த.க.பாடசாலை.
103. அ.அனுஸ்ரிகா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
104. கு.சென்போல், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
105. V.சஞ்சீவன், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
106. க.சாயிராம், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
107. வி.தனுசன், கோப்பாய் நாவலர் வித்தியாலயம்.
108. க.தனுசன், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
109. ஞா.தினேஸ்றைமன், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
110. G.சாம்சன், றோ.க.த.க.பாடசாலை.
111. சா.துசிந்தன், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
112. சா.துஷந்தன், உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
113. சு.சூர்யா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
114. யோ.சுகன்யா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
115. பா.பிறேமசியா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
116, வா.நிலாணி, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.
117. அ.அனுஸ்டிகா, உரும்பிராய் றோ.க.த.க.பாடசாலை.

## கடந்த வாரம் வெளியான வினாக்களுக்கான விடைகள்

1) 3
2) 1
3) 1
4) அன்னை
5) கண்ணீர்
6) பாடசாலை போ
7) பாரதிதாசன்
8) தாய் / மாதா
9) பொருத்தமானது
10) பூ / தலை
11) பொருத்தமானது
12) பொருத்தமானது
13) கை கலத்தல்
14) குதிரை
15) யானை
16) ஒளி.
17-20 பொருத்தமான வசனங்கள்
21) 1
22) 1
23) பொருத்தமானது
24) 3.23
25) திங்கள்
26) வெள்ளி
27) 1078
28) 142
29) 14kg 625g
30) 11l 880ml.
31) 35
32) 28
33) 75
34) 1
35) 1
36) 1
37) சரி
38) பிழை
39) சரி
40) சரி
41) பிழை
42) கம்மாலை
43) சுத்தியல்
44) அரம்
45) உளி
46) வாள்
47) சுத்தியல
48) 5
49) 1
50) 2
51) 3
52) 4
53) ஊக்கவிசை
54) சுழலிடம்
55) சுமை
56) 1
57) 3
58) 1
59) 3
60) 1
61) மேல் நோக்கி
62) நீர் விரிவடைதல
63) கீழ் நோக்கி
64 நீர் சுருங்குதல்
65) வேகத்தை அளத்தல்
66) திசையை அறிதல்
67) ஒன்று
68) 6
69) 4
70) 1
71) 3
72) 7
73) 2
74) 5
75-80. பொருத்தமான வசனங்கள்.

# கால்நடைகளில் ஒட்டுண்ணிகளை போக்க உரிய மருந்துகளைப் பயன்படுத்துவது அவசியம்.

கால்நடைகளின் பராமரிப்பில் பொருளாதார கஷ்டத்தை ஏற்படுத்தும் காரணிகளில் ஒட்டுண்ணித் தாக்கமும் ஒன்றாகும். கன்றுகளில் இறப்பினையும் பால் உற்பதியில் வீழ்ச்சியினையும். சினைப்பட்ட பசுக்களின் கருச்சிதை வினையும், காளைகளில் பலவீனத்தையும் ஏற்படுத்துகின்ற ஒட்டுண்ணிகளைக் கட்டுப் படுத்துவது மிக அவசியமான ஒன்றாகும். அத்துடன் குடற்புண், செப்ரிசீமியா போன்ற மிக மோசமான நோய்களையும் இவை ஏற்படுத்துகின்றன. ஒட்டணண்ணிகளை அக ஒட்டுண்ணிகள், புற ஒட்டுண்ணிகள் என இரண்டாகப் பிரிக்கலாம் அக ஒட்டுண்ணிகளாக வட்டப்புழு, நாடாப் புழு, கொழுக்கிப் புழு போன்ற குடற்புழுக்களும், புற ஒட்டுண்ணிகளாக உண்ணி, பேன், தெள்ளு போன்றவையும் காணப்படுகின்றன.

### அறிகுறிகளும், கட்டுப்படுத்துதலும் அக ஒட்டுண்ணிகள்

மாடு, ஆடுகளில் துர்நாற்றத்துடன் கூடிய தொடர்ச்சியான வயிற்றோட்டமும் தாடை வீக்கம், மயிர் உதிர்தல் அல்லது குழம்பிக் காணப்படுதல், கன்றுகளில் வயிறு வீங்குதல் (பானை போன்ற வயிறு) என்பனவும், உணவுப் பொருட்

**பொருண்மியச் செய்தி**

களில் காணப்படும் போசனைப் பொருட்களை குடற்புழுக்கள் உறுஞ்சுவதால் கால்நடைகள் மெலிந்தும் காணப்படும். இவற்றை தடுப்பதற்கு $1^1/_2$ மாத வயதில் முதல் முறையாகவும், பின்னர் 3மாதங்களுக்கு ஒரு முறையும் குடற்புழு மருந்து வழங்கவேண்டும் இம் முறைகள் தவறும் பட்சத்தில் மழைக்காலம் ஆரம்பமாவதற்கு முன்னரும் பசுக்களாயின் அவை சினைப் படுத்தலுக்கு முன்பாகவும் வழங்கப்படவேண்டும். அனலக்ஸ், அல்ஸோல், நில்லேம், பிப்பரசின் மருத்துகளை கால்நடை வைத் தியரின் ஆலோசனையுடன் பயன் படுத்தலாம்.

பறவைகளில் இரத்தக் கழிச்சல் மலத்துடன் குடற்புழுக்கள், சோர்வு மெலிந்து பாரமற்றுக் காணப்படும் முட்டை உற்பத்தியில் பெரும் வீழ்ச்சி காணப்படும் இவற்றைத் தடுப்பதற்கு குஞ்சுகளுக்கு 45வது நாளில் முதல் முறையாகவும். முட்டையிட ஆரம்பிப்பதற்கு முன்னர் ($3^1/_2$ - 4 மாதங்களில்) இரண்டாவது முறையாகவும் பிப்பரசின் கூப்பேன் குடற்புழு மருந்துகளையும் வழங்கவேண்டும்.

### புற ஒட்டுண்ணிகள்

கால்நடைகளின் உடலின் வெளிப புறத்தில் காணப்படும்இவை போசனைப் பொருட்கள்ளயம் இரத்தத்தையும் உறுஞ்சுவதால் உண்ணிக் காய்ச்சல் இரத்தச் சோகை என்பன ஏற்பட்டு கால்நடைகள் மெலிந்து பலம் அற்று சோர்வாகக் காணப்படும் இவற்றின் தோல் பகுதியில் சிறு புண்கள் ஏற்பட்டு மயிர்கள் உதிர்ந்து தோலின் தரமும்கெட்டுவிடும் பறவைகளில் முட்டை உற்பத்தியும் வீழ்ச்சியடையும் இறைச்சிக் கோழிகளில் நிறை இழப்பினையும் ஏற்படுத்துகின்றன இவற்றைத்தடுப்பதற்கு அசன்டோஸ், ஈ.சி.கிறனேற், பேற்ரிக்கோல் பியூரொக்ஸ் போன்ற மருந்துகளை கால்நடை வைத்தியரின் ஆலோசனையுடன் பயன் படுத்தலாம். ஒட்டுண்ணிகளானவை கால்நடைகளில் இறப்பினையும் ஏற்படுத்தக்கூடிய வாய்ப் புள்ள தனால் பண்ணையாளர்கள் இவற்றைக் கவனத்தில் கொள்வதன் மூலம் கால்நடைப் பராமரிப்பில் இழப்புக்களைத் தவிர்த்து அதிக இலாபத்தை பெறலாம்.

## எரிபொருளின் விலையைக் குறைக்க கோரிக்கை

(திருநெல்வேலி)

யாழ்.குடாநாட்டில் எரிபொருட்களின் விலைகளைக் குறைப்பதற்கு நடவடிக்கை எடுக் குமாறு சாவகச்சேரி பிரதேச சபைத் தலைவர் அன்ரன் பொன்னையா எரிபொருள் மின்சக்தி அமைச்சர் கரு ஜெய சூரியவுக்கு கடிதம் அனுப்பியுள்ளார்.

கொழும்பைவிட குடாநாட்டில் பெற்றோலீன் விலை 20 ரூபா அதிகரித்து விற்பனை செய்யப்படுவதாக சுட்டிக்காட்டியுள்ளதுடன், கொழும்பு விலையிலேயே யாழ்ப்பாணத்திலும் பெற்றோலை விற்க நடவடிக்கை எடுக்குமாறும் அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

(உ-43)



எம்.டி.குணசேன நிறுவன புத்தகக் கண்காட்சியை துணைவேந்தர் பாலசுந்தரம்பிள்ளை தொடக்கி வைக்கிறார். அருகில் பிரதம விருந்தினர் சி.இளம்பரிதி, பேராசிரியர் சண்முகதாஸ், மற்றும் படைப்பாளிகள் காணப்படுகின்றனர்.



கரவெட்டி மாணிக்கவாசகர் வித்தியாலய நூற்றாண்டு ஞாபகார்த்தக் கட்டடத் திறப்புவிழாவிலே ஆலய பிரதமகுரு ஆசியுரை நிகழ்த்துவதையும் யாழ். மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் எஸ்.சிவராசா வடமராட்சி வலய கல்விப் பணிப்பாளர் V.T.செல்வரத்தினம் ஆகியோர் அமர்ந்திருப்பதையும் படத்தில் காணலாம்.



இணுவில் பொது நூலகத்தின் திறப்பு விழா சிறப்பு மலர் வெளியீட்டின் போது கொழும்புக் கிளை (இணுவில் பொது நூலகம்) சிரேஷ்ட உறுப்பினர் திரு.இ. சிவலோகநாதன் (K.R.S) உரிமையாளர் முச்சக் கரவண்டியினை வழங்குவதையும் அருகில் லண்டன் கிளை அமைப்பாளர் இ.சிவகுமார் ஆசிரியர்கள் ஞானதிருக்கேதீஸ்வரன் S.முகுந்தன் ஆகியோர் காணப்படுகின்றனர்.

அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் குறித்து

# பொலிஸ்மா அதிபர், ஜே. வி. பி. இன்று கொழும்பில் கூடி ஆராய்வு

(கொழும்பு)

நாட்டில் அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் குறித்து பொலிஸ்மா அதிபர் லக்கி கொடித்துவக்கும் ,ஜே.வி.பி. தலைமைப் பீடமும் கூடி இன்று கொழும்பில் ஆராய வுள்ளனர்.

நாட்டில் தற்போது தலை தூக்கியுள்ள குற்றச் செயல் களுக்கு ஜே. வி. பி காரண மாக விருப்பதாக பொலிஸ் திணைக்களம்குற்றம்சுமத்திய தும்,

இது குறித்து பொலிஸ்மா அதிபர் தங்களுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டு மென ஜே.வி.பி. பகிரங்க வேண்டுகோள் விடுத்ததும் தெரிந்ததே.

இன்று இடம்பெறவுள்ள பேச்சில்,ஜே.வி.பி சார்பில் பொதுச் செயலாளர் டில்வின் சில்வா, பிரசாரச் செயலாளர் விமல் வீரவன்ச ஆகியோர் கலந்து கொள்ள வுள்ளனர்.

## கருணாநிதி கைது விவகாரம் உச்ச நீதிமன்றமே இனி விசாரணை மேற்கொள்ளும்

கடந்த ஆண்டு தி. மு. க. தலைவர் மு. கருணா நிதி கைது செய்யப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணையை இனி உச்சநீதிமன்றம் மேற் கொள்ளவுள்ளது.

சர்ச்சைக்குள்ளான இவ் வழக்கை சென்னை உயர்நீதி மன்றம் விசாரணைக்கு எடுத் துக் கொண்டது. ஆனால் இந்த வழக்கில் சட்டப் பிரச் சினை உள்ளதால் இதனை உச்ச நீதிமன்றமே மேற் கொள்ளவேண்டும்எனநீதிபதி கள் அடங்கிய குழு உத்தரவிட் டுள்ளது. (ஷ)

## இந்திய இமயமலையால் விரைவில் பேரழிவு

சுற்றுப்புறச் சூழல் அமைப்பு எச்சரிக்கை

(புதுடில்லி)

இந்தியாவின் கிரீடமாக விளங்கும் இமயமலையால் விரைவில் பல்வேறு அழிவுகள் ஏற்படப் போவதாக ஐக்கிய நாடுகள் சபையின் சுற்றுப்புற சூழல் அமைப்பு தெரிவித்துள் ளது.

பூமியில் ஏற்பட்டுள்ள சுற் றுப்புற சூழல் பாதிப்பால் ஓசோன் படலத்தில் ஓட்டை ஏற்பட்டு பூமியின் வெப்பம் அதிகரித்து வருகிறது.

இதனால், இமயமலையில் உள்ள பனிக்கட்டிகளும் உருகு கின்றன. இன்னும் 10 ஆண்டு களில் இவை பாரிய பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்று ஐக்கிய நாடுகள் சுற்றுப்புற சூழல் ஆராய்ச்சியாளர்கள் எச்சரித்துள்ளனர்.

இதைத் தடுக்க முன் நட வடிக்கை எடுக்காவிட்டால் நேபாளத்தில் 20 ஏரிகளும், பூட்டானில் 24 ஏரிகளும் திடீர் வெள்ளப் பெருக்கால் உடைந்துவிடும் என்றும் அவ்வமைப்பு எச்சரித்துள் ளது. (உ)

## சீனத் தொழிற்சாலை விபத்தில் 13 பேர் பலி

(பீஜிங்)

கிழக்குச் சீனா உரத் தொழிற்சாலை ஒன்றில் இடம்பெற்ற விபத்தில் 13 பேர் உயிரிழந்ததுடன் 11 பேர் காயமடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் இச்சம் பவம் இடம்பெற்றுள்ளது.

அமோனியா வாயு கசிந்த தால் இவ்விபத்து ஏற்பட்ட தாக தெரிவிக்கப்படுகிறது. (ஷ)

## நிலக்கரி சுரங்க தீ விபத்து 35 பேர் உடல் கருகி பலி

(கீவ்)

உக்ரைன் நாட்டின் கிழக் குப்பகுதியிலுள்ள நிலக்கரிச் சுரங்க மொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 35 பேர் உடல் கருகி பலியாகியுள்ள ன [illegible]

சுமார் 114 சுரங்கத் தொழி லாளர்கள் வேலைகளில் ஈடு பட்டிருந்த சமயமே நேற்று முன் தினம் இத் தீ விபத்து ஏற்பட்டது.

மீட்புக் குழுவினர் 79 சுரங் கத் தொழிலாளர்களை உயிரு

## கொடியேற்றம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் புனித கார்மேல் அன்னையின் கொடியேற்றம் இன்று காலை இடம்பெறவுள் ளது.

நவநாள் பலிப் பூசைகள் மாலை 4.30 மணிக்கு இடம் பெறவுள்ளன. (உ-6)

## கும்பாபிஷேகம்

(காரைநகர்)

காரைநகர் பத்தர்கேணி வண்மீக விநாயகர் ஆலய மகாகும்பாபிஷேகம் நாளை வியாழக்கிழமை நடைபெற வுள்ளது. (உ-246)

## கூட்டுத் திருப்பலி

(யாழ்ப்பாணம்)

நல்லூர் புனித ஆரோக்கிய? வாதப்பர் ஆலய வருடாந்த திருநாள் கூட்டுத் திருப்பலி நாளை காலை 7.15 மணிக்கு இடம்பெறவுள்ளது. (உ-6)

நவீன சந்தை

## திறப்பு

(திருநெல்வேலி)

சாவகச்சேரி பிரதேச சபை யால் கொடிகாமத்தில் அமைக்கப்பட்டநவீன சந்தை இன்று மு.ப 10.00 மணிக்கு பிரதேசசபைத் தலைவர்அன் ரன் பொன்னையாவால் சம் பிரதாய பூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது. (உ-43)

## தமிழ்த்தின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

## இந்திய மீனவர் நடமாட்டம் வடமராட்சி மீனவர் வலைகள் நாசம்

(திருநெல்வேலி)

இந்திய மீனவரின் நடமாட் டம் வடமராட்சி மீனவர் களுக்கு தொடர்ந்தும் அச்சு றுத்தலாக இருந்து வருகின் றது.

நேற்றைய தினம் வட மராட்சிக் கடலில் புகுந்த இந்திய மீன்பிடி றோலர்கள் ஒவ்வொன்றும் 80 ஆயிரம் ரூபா பெறுமதியான 4 வலை களைச் சேதமாக்கியிருப்ப தாக தெரியவருகிறது.

இதேவேளை இந்திய மீன வர்களின் அத்துமீறல் தொடர் பாக வடமராட்சி மீனவர்கள் பொறுப்பு வாய்ந்த தரப்பு களிடம் பல தடவைகள் முறையிட்டும் பலனேதும் கிட்டவில்லை என்பதும் குறிப் பிடத்தக்கது. (உ-43)

## அன்பு கருணை

களை கழிவொலிகள் மூலமே அறிந்து தமது பயணத்தில் விலகிச் செல்கின்றன. இந்த நல்ல வழிகாட்டும் வெள் ளைப்பிரம்பு எப்போது பாவனைக்கு வருகின்றதோ தெரியவில்லை. ஆனால் இக் கண்டுபிடிப்பு பார்வையற் றோர்க்கு ஒரு வரப்பிரசாத மல்லவா.

பார்வையிழந்தோர், செவிப்புலனிழந்தோர், வாய் பேச முடியாதோர் யாவருக் கும் கல்விகற்கவும் அவர்கள் ஒருவரொடு ஒருவர் உரை யாடவும்

கலைத்துறை, விளையாட்டுத் துறை,மற்றும் பொழுது போக்குகள் யாவற்றிலும் பயன் பெறக்கூடியதாக உல கெங்கிலும் பல பாடசாலை கள் இயங்கி வருகின்றன. எமது யாழ். மாவட்டத்திலும் கைதடியில் நவில்ட் குருடர் செவிடர் பாடசாலை ஒன்று இயங்கிவருகின்றது. இதன் மூலம் பலர் பயன்பெற்றுள்ள தாக அறிந்துள்ளோம்.

கண்ணிவெடி மிதிவெடிகள்

அவற்றை தற்போது நாட் டில் அதிகரித்து வரும் ஒரு தவிர்க்க முடியாத கொடுமை கால்,கைகள் ஊனமுற்றோ ரின் பரிதாப நிலையாகும். தொழிற்சாலைகளில் வேலை செய்வதால் ஏற்படும் விபத் துக்கள் மூலமும் சாலைவிபத் துக்கள் மூலமும் மற்றும்எதிர் பாராத விபத்துக்கள் மூலமும் தமது அவயவங்களை இழந் தோர்இழப்போர்தொகையை விட தற்போது போர்க்கால சூழலால் நிலக் கண்ணிவெடி கள், மிதிவெடிகள் ஷெல்தாக் குதல் என்பவற்றாலேயே கோடிக்கணக்கானோர் உல கில் கை,கால்களை இழந்து அவலப்படுகின்றனர். இவை அரசினால் மக்களுக்கு இழைக் கப்படும் கொடுமையாகும்.

உலகிலுள்ள எழுபது நாடுக ளில் பத்துக்கோடி மிதிவெடி கள்,கண்ணிவெடிகள் புதைக் கப்பட்டு விதைக்கப்பட்டு உயிர்களைப் பலிகொள்வதற் காகத் தயார் நிலையில் காத்

புதியநிர்வாகம்

## தெரிய கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகரசபைக்குட் பட்ட சனசமூக நிலையங்க ளில் இவ்வாண்டுக்கான புதிய நிர்வாகத்தைத் தெரிவுசெய் யாதவர்கள் உடன் நிர்வாகத் தைத் தெரியுமாறு யாழ்.மாந கரசபை கேட்டுள்ளது.

அவ்வாறுநிர்வாகத்தினைத் தெரிவுசெய்யாத விடத்து, யாழ்.மாநகரசபையில் குறிப் பிட்ட சனசமூக நிலையத் திற்கு ஒதுக்கப்படும் நிதி நிறுத்தப்படுமெனவும் அறி வித்துள்ளது. (ஷ-19)

களுக்கு ஆளாகுபவர்களில் 16.6 வீதத்தினர் முழங் காலுக்கு கீழ் ஒரு காலை இழக்கின்றனர் 2.9 வீதத்தி னர் இருகால்களையும் இழக் கின்றனர். 1979ற்கும் 1996 இற்கும் இடைப்பட்ட காலத் தில் உலகின் பல்வேறுநாடுகளி லும் அமைக்கப்பட்ட45புனர் வாழ்வு மையங்கள் ஊடாக ஒரு லட்சம் செயற்கைக் கால் கள் ஒரு லட்சத்து 46 ஆயிரம் ஊன்று கக்கத் தண்டங்கள்7ஆயிரத்து 600சக்கர நாற்காலிகள் போன்றவற்றைஜெசிலுவை சர்வதேசக்குழு விநியோகித் துள்ளது.

ஊனமுற்றோரைப் பாதுகாப்ப தெவ்வாறு சாத்தியம்

10 வயதில் மிதிவெடிக்கு கால் இழக்கும் ஒரு சிறுவன் அதற்குப் பின்னர் 40 முதல் 50 வருடங்கள் வாழ்வதனால் 15 தடவை செயற்கை கால் களை மாற்ற வேண்டிய தேவைஅவனுக்குநேரிடும்இது பெரும் பொருட் செலவை ஏற்படுத்தும் விடயமாகும். சாதாரண மக்களுக்கு இது சாத்தியப்படும் விடயமா? மனித வர்க்கத்தைவில் கற்க வேண்டிய அனுபவிக்க வேண்

குப்பகுதியிலுள்ள நிலக்கரிச் சுரங்க மொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சுமார் 35 பேர் உடல் கருகி பலியாகியுள்ளன [illegible] ர மட்டத்து கீழ 67[illegible] மீறறர் ஆழத்தில் ...ர்கள் வேலைகளில் ஈடு பட்டிருந்த சமயமே நேற்று முன் தினம் இத் தீ விபத்து ஏற்பட்டது.

மீட்புக் குழுவினர் 79 சுரங்கத் தொழிலாளர்களை உயிருடன் மீட்டுள்ளனர். (உ-8)

# தமிழக முதல்வர் ஜெயா ஜனநாயகத்தை மீறுகிறார் பழ. நெடுமாறன் கண்டனம்

(சென்னை)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீது இந்திய மத்திய அரசு தடைவிதித்திருப்பது அநீதியானது என்று தமிழர் தேசிய இயக்கத் தலைவர் பழ. நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வை. கோபாலசாமியை 'போடோ' சட்டத்தின்கீழ் மாநில அரசு மிரட்டி வருவது தொடர்பாக பழ. நெடுமாறன் அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார். அந்த அறிக்கையிலேயே மேற்கண்டவாறு இந்திய மத்திய அரசை குறை கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிவரும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவரைப் போடோ சட்டத்தின் கீழ் கைது செய்யப்போவதாக மாநில அரசு மிரட்டி வருவது ஜனநாயகத்திற்கு விரோதமான செயலாகும். இதனை நாம் மிகவன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இலங்கையில் அமைதி ஏற்பட நோர்வே அரசு செய்து வரும் சமரசப்பேச்சுவார்த்தைக்கு ஆதரவழிப்பதாக பிரதமர் வாஜ்பாய் கூறியுள்ளார்.

ஆனால், விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாக ஈழத்தமிழர் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்று குரல்கொடுத்தால் அவர்களை 'போடோ' சட்டத்தின் கீழ் கைது செய்யப் போவதாக மிரட்டுகிறார்கள்.

இதனால், போடோ சட்டத்தை நீக்கவேண்டும். இலங்கையில் சமாதானப் பேச்சுவார்த்தைக்கு ஏற்பட்டுள்ள முட்டுக் கட்டைகளைப் போக்கி பிரச்சினைக்குத்தீர்வு காணவேண்டும் என்று பழ. நெடுமாறன் அவ் அறிக்கையில் கூறியுள்ளார். (வ)

## தமிழ்த்தின போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

நல்லூர் கோட்டக்கல்விப் பாடசாலைகளுக்கு இடையிலான தமிழ்த்தினப்போட்டிகள் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையில் நடைபெறும் என நல்லூர் கோட்டக்கல்வி பணிப்பாளர் திருமதி க.காங்கேயன் அறிவித்துள்ளார்.

(உ-19,2)

## குருநாகல் மேயர் யாழ்.வருகிறார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபையின் நிதிக் குழுக் கூட்டம், பொதுக்கூட்டம் ஆகியன முறையே இம்மாதம் 15,17 ஆம் திகதிகளில் யாழ்.மாநகர முதலவர் எஸ். கந்தையன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதேவேளை, தற்போது கொழும்பில் தங்கியுள்ள முதல்வர் நாளை மறுதினம் யாழ்.திரும்பவுள்ளார்.

இவருடன் குருநாகல் முதல்வரும் நல்லெண்ண விஜயமாக யாழ். வரவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(உ-19)

உலகிலுள்ள எழுபது நாடுகளில் பத்துக்கோடி மிதிவெடிகள், கண்ணிவெடிகள் புதைக்கப்பட்டு விதைக்கப்பட்டு உயிர்களைப் பலிகொள்வதற்காகத் தயார் நிலையில் காத்திருக்கின்றன ஒவ்வொருமாதமும் கண்ணிவெடிக்குசராசரி 800 பேர் வரை பலியாகின்றார்கள். 1200 பேர் வரை முடமாகின்றனர். அதாவது சராசரியாக 20 நிமிடத்திற்கு ஒருவர் கண்ணிவெடியால் செயல் இழக்கின்றனர்.

சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின்சேவை

யுத்த காலத்தில் காயமடைந்து சர்வதேசசெஞ்சிலுவைக்குழுவால் சிகிச்சைக்கு உட்படுத்தப்படுவோரில் கால்வாசிப்பேர் கண்ணிவெடியினால் பாதிப்புற்றவர்களாவர் 1985ற்கும்1995ற்கும்இடைப்பட்டகாலத்தில் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஒருலட்சத்து நாற்பதாயிரம் காயக்காரர்களுக்கு சர்வதேசசெஞ்சிலுவைக்குழு சத்திர சிகிச்சை வழங்கியது. அதில் 30 ஆயிரம் பேர்நிலக்கண்ணியால் பாதிப்புற்றவர்களாவர். 1991 ல்வடக்கு சோமாலியாவின் ஹார்கோஸாவுக்கு திரும்பியஅகதிகளில் கண்ணி வெடியால்காயமுற்றவர்களில் 75 வீதத்தினர் சிறுவர்கள் எனக் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

கண்ணி நிலக்கண்ணிவெடி

... பெரும் பொருட் செலவை ஏற்படுத்தும் விடயமாகும். சாதாரண மக்களுக்கு இது சாத்தியப்படும் விடயமா? மனித வாழ்க்கையில் கற்க வேண்டிய அனுபவிக்க வேண்டிய அரும்பணியாற்ற வேண்டிய விடயங்கள் எவ்வளவோ இருக்கஅ நியாயமாககாலமும் பெருளும்விரயமாவதுமுறையா? மக்களுக்கு எதிரான கண்ணிகள் இராணுவத்திற்கு தேவைதானா?

ஒருவருடத்தில் ஒரு லட்சம் கண்ணிகள்செயலிழக்கப்பட்டு நீக்கப் படுகின்றதாம் 20 லட்சம் கண்ணிகள் புதிதாகப் புதைக்கப்படுகின்றதாம். இந்நிலை நீடித்தால் தீர்வுகிட்டுமா? ஓசோன் படலத்தின் ஓட்டையைக் கூட அடைத்து விடலாம். முடமாவோரைப் பாதுகாப்பது சாத்தியமாகுமா?

இவை தனிமனித சக்திக்கு அப்பாற்பட்டவை. ஊனமுற்றோரின் உரிமைகளை மதித்து அவர்களுக்கு சமூகத்தில் சம அந்தஸ்த்து கொடுத்து தன்னம்பிக்கையுள்ளவர்களாக வாழ எமது சக்திக்கு இயன்றவரை உதவி புரிந்து மனித நேயத்துடன் செயற்படுவோம்.

மன்னுயிர் ஓம்பி அருளாள்
வார்க்கு இல்லென்ப
தன்னுயிர் அஞ்சும் வினை.

திருக்குறள்

ஒலித்த கால் என்னாம் உவரி
எலிப்பகை
நாகம் உயிர்ப்பக் கெடும்.
குறள்

# வலம்புரி

## ஆட்சேர்ப்பு எதற்காக?

படைக்கு ஆட்சேர்ப்பதற்கான திகதி மேலும் நீடிக்கப்பட்டிருந்தபோதிலும், சிங்கள இளைஞர்கள் படையில் சேர முன்வரவில்லை என இராணுவப்பேச்சாளர் சரத் கருணாரட்ண தெரிவித்துள்ளார்.

இலங்கையின் வரவு செலவுத் திட்டத்தில் பாதுகாப்புச்செலவு மிக உச்சமாக இருப்பதனால், அபிவிருத்தி நோக்கிய முதலீட்டுச் செலவுகளை மேற்கொள்ள முடியாதுள்ளது. இதிலும், அரசின் நடைமுறைச் செலவுகளில் பாதுகாப்புப் படையினருக்கான சம்பளச் செலவு மிகவும் உயர்வாக உள்ளது.

அதாவது தேவைக்கதிகமாக படையினரைச் சேர்த்துக் கொண்டதனால் அவர்களுக்கானசம்பளக் கொடுப்பனவுநடைமுறைச் செலவீனத்தில் கணிசமான இடத்தை வகிக்கிறது. இந்நிலையில், மீண்டும் படைக்கு ஆட்சேர்ப்பு நடைபெறுவது சமாதானத்தின் அரும்புகளைக் கருகச் செய்யுமே தவிர துளிர்க்கச் செய்யாதென்பது வெளிப்படை.

சமாதானம் என வெளியில் கூறிக்கொண்டு படைக்கு ஆட்சேர்க்கும் நடவடிக்கை மறைமுகமான யுத்த ஆயத்தம் என்றே கூறவேண்டும்.

படையில் சேர்வதற்கு சிங்கள இளைஞர்கள்முன்வரவில்லையெனக் கவலையுறும் இராணுவப் பேச்சாளர், இளைஞர்கள் ஏன் படையில் சேரவில்லை, ஏற்கனவே படையில் சேர்ந்துகாணமல் போன அல்லது விடுதலைப் புலிகளிடம் கைதாகியுள்ள படையினரின் விடயத்தில் அரசுஎத்தகையபோக்கைக்கடைப்பிடித்தது. புலிகளுக்கெதிரான போராட்டத்தில் படையினர் வெல்லமுடியுமா? போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்ந்ததன் நிமித்தமே சிங்கள இளைஞர்கள் படையில் சேரப் பின்னடிக்கின்றனர் என்ற உண்மையை அரசு புரிந்து கொள்ளவேண்டும்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே சமாதானப் பேச்சுவார்த்தை நடைபெற்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுமாயின் சிங்கள இளைஞர்கள் தாமாகவே முன்வந்து படையில்சேருவார்கள். ஆகவே இராணுவப் பேச்சாளரின் கவலை தீர வேண்டுமாயின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படுவது அவசியமாகும்.

# பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை எழுதிய

# பேச்சுவழக்கு நாடகங்கள் பெரும் பயனுள்ளவை

**இ. சிவானந்தன்**

பேச்சுவழக்கினைக் கையாண்டு நாடகங்கள் எழுதித் தமிழ்நாடகத்துறைக்குத் தொண்டுசெய்தவர் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை. ''உடையார் மிடுக்கு'', ''முருகன் திருகுதாளம்'' 'கண்ணன் கூத்து', 'நாட்டவன் நகர வாழ்க்கை' ஆகிய நாடகங்களைக் கொண்ட ''நானாடகம்'' எனும் நாடக நூலை வெளியிட்டவர். ''பொருளோ பொருள்'' ''தவறான எண்ணம்'' சுந்தரம் எங்கே?'', துரோகிகள், ''மாணிக்க மாலை'' ''சங்கிலி'' ஆகிய நாடகங்களையும் எழுதித் தமிழ் நாடக உலகிற்குத் தொண்டு செய்தார் என 1969 தினகரன் நாடகவிழா மலரில்''தமிழ்நாடகம்வளர்ச்சிப்பாதையில் திருப்புமுனை அமைத்த பேராசிரியருக்கு அஞ்சலி'' என்ற தலைப்பில் காண்கிறோம்.

இவரது நாடகப்பணியை, சமூக நாடகம், வரலாற்று நாடகம்; தழுவல் நாடகம், என்று பகுத்தாய்வது நல்லது.

சமூக நாடகம்

நானாடகத்துள் வரும் நான்கு நாடகங்களுடன், இரு நாடகத்துள் வரும் ''பொருளோ பொருள்'', ''தவறான எண்ணம்'' எனும் இரு நாடகங்களும், ''சுந்தரம் எங்கே?'', ''துரோகிகள்'' எனும் அச்சேறாத இரு நாடகங்களுமாக மொத்தம் எட்டுச் சமூக நாடகங்களை இலங்கைப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சங்கம் பல தடவை மேடையேற்றியுள்ளது. அதிலும்குறிப்பாகநானாடகங்கள் 1936-1940 காலப்பகுதியில் கொழும்பிலே முதன் முதலாக நடிக்கப்பட்டன.

உடையார் மிடுக்கு

''... யாழ்ப்பாணத்தில் அக்காலத்தில் உடையார்கள் தமது பதவியினால் கிடைத்த அந்தஸ்து, செல்வாக்குக் காரணமாகத் தலைக்கனம் கொண்டு பிறரை மதிக்காமல் நடமாடுவதையும், அவர்களது நடைஉடை பாவனைகளையும் தமது நாடகத்தில் வரும் உடையார்என்றபாத்திரத்தின் மூலமாகப் புலப்படுத்துகிறா . அக்காலத்துச் சமுதாயத்தில் உடையார் பதவிக்கிருந்த மிடுக்கை அம்பட்ட ஆறுமுகத்தானுடன் உடையார் பேசும் உரையாடல்கள் மூலமாகஆசிரியர்புலப்படுத்துகின்றார். ஒரு கட்டத்தில் உடையார் அவனை அடிக்கவுஞ் செய்கிறார்.

1952 இலே கொழும்பிலிருந்த தமிழ்ப் போதனாபீடம் பேராதனைக்கு மாற்றம் செய்யப்பட்டது. இம் மாற்றத்தால் ஏற்பட்ட இடர்களினால் 1952 இல் நாடகம் எதுவுமே தயாரிக்கப்படாத ஒரு ஸ்தம்பித நிலை உண்டானது.

''... கொழும்பில் பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் இருந்த பொழுது நாடகஅரங்கேற்றத்துக்கு எல்லாவித வசதிகளும் இருந்தன. எனவே அங்கு நாடகம் வெகுவிமரிசையாக நடப்பது வழக்கம். ஆனால் பேராதனையில் நாடகம் அரங்கேற்றுவதற்குத் தடையாக இருந்த இடையூறுகள் பல. எனினும் வெற்றியுடன் முதலாம் 'தவணைக் கடைசியில்' உடையார் மிடுக்கு' என்னும் நாடகத்தை யாரும் எதிர்பார்த்திராத வகையில் மிகச் சிறப்புடன் நடாத்தினோம். பல்கலைக்கழகத் தமிழ்ச்சங்கம் கண்டியில் நடாத்திய முதல் நாடகம் இதுவேயாதலால் நாங்கள்பட்ட இன்னல்களுக்குக் குறைவேயில்லை''

என்கிறது 53–54 ஆம்ஆண்டின் இளங்கதிர்க் குறிப்பொன்று. கண்டி திரித்துவக் கல்லூரியில் மேடையேறிய இந்நாடகத்தில் உடையாராகக் கலாநிதி கா. சிவத்தம்பியும் உடையாரின் மகனாக கலாநிதி க. கைலாசபதியும், திருப்புகழ்பாடுபவராக இன்றைய தினகரன் ஆசிரியர் இ. சிவகுருநாதனும் நடித்திருக்கிறார்கள்.

முருகன் திருகுதாளம்

'' புறொபசர் சோமசுந்தரத்தைத் தமது மகளுக்குத் திருமணம் செய்ய விரும்பிய சுப்பிரமணியம்'' உனக்கென்ன விசரே?, உதைப் பார்த்துக்கொண்டிருக்க ஏலாது. உந்தக் கதை பரம்ப முந்திக் கட்டியடிச்சுப் போட வேணும்'' என்று கூறுவதில் பதவியும், பொருளும் உள்ள ஆணுக்கு- அவன் எப்படியிருந்தபோதிலும்- எப்படியாவது மகளைக் கொடுத்துவிட வேண்டும் என்று விரும்பும் யாழ்ப்பாணத்து மக்களின் மனப்பான்மை தொனிக்கிறது.''

இந்நாடகத்திலே நகைச்சுவையே முக்கியத்துவம்பெற்றிருந்ததெனவும், யதார்த்தப் போக்குக் குறைவாகக் காணப்படுவதாகவும் புறொபசர் சோமசுந்தரத்தையும் ஆராய்ச்சி மாணவர் சுப்பையாவையும் தவிர்ந்த ஏனைய பாத்திரங்கள்ஓரளவு உண்மை மானிடர்களாக உலாவுகின்றனர் எனவும், ஒருதாயை எவ்வளவு யதார்த்தபூர்வமாகப் படைக்கமுடியுமோ, அவ்வளவுக்குச் சிறப்பாக ஆசிரியர் படைத்துள்ளதாகவும் விமர்சிக்கப்பட்டுள்ளது

1950 - 1951 இளங்கதிர்க் குறிப்பொன்றின்படி,

''... இவ்வருடம் பேராசிரியர்க. கணபதிப்பிள்ளையின் முன்னர் எழுதிய முருகன் திருகுதாளம்'' என்ற நாடகத்தை நடித்தோம். காலம் அதிகம் இருந்திராத போதிலும், அண்மையில் மேல்நாட்டிலிருந்து கலாநிதிப் பட்டம் பெற்றுவந்தவிரிவுரையாளர் சு. வித்தியானந்தனின் உதவியைக் கொண்டும், பேராசிரியரின் உதவியைக் கொண்டும் இரு வாரங்களில்நடிக,நடிகையரைப் பயிற்றிச் சிறப்பாக நாடகத்தை நடித்தோம்' என்றுள்ளது.

இரு வாரங்களில் ஒத்திகை பார்த்த நாடகத்தயாரிப்பின் தரம் எந்த அளவில் இருந்திருக்க முடியும்? என்பது கேள்விக்குறியே.

கண்ணன் கூத்து

''சண்முகம் சாதிக்கட்டுப் பாட்டின் காரணமாகத் தமது மகனையும் மருமகளையும் பேரப்பிள்ளையையும் பிரிய வேண்டி வந்தமையை யிட்டு வருத்த முற்று கண்ணனிடம் கூறும் கட்டங்களும், வல்லிபுரக் கோயிலில் வீட்டாருக்குத் தெரியாமல் ரகசியமாகப் பேரப்பிள்ளையின் பெயரில் அர்ச்சனைசெய்விப்பதுயாழ்ப்பாணத்துச் சாதியமைப்பு நெகிழத் தொடங்கி விட்டது என்பதைச் சுட்டிக்காட்டுமாறு இந்நாடகம் பின்னப்பட்டது.மேலும் இந்நாடகத்தில் யாழ்ப்பாணத் தமிழர் இந்தியத் தமிழர் பற்றிக் கொண்டிருக்கும் தவறான கருத்துக்களையும் சந்தர்ப்பம் வாய்ந்த போது ஆசிரியர் சுட்டிக் காட்டத் தவறவில்லை.

நாட்டவன் நகரவாழ்க்கை

கொழும்பையும் பருத்தித்துறைப் பகுதியில் ஒரு கிராமமான தும்பளையையும் கதை நிகழிடங்களாகக் கொண்டு இந்நாடகம் படைக்கப்பட்டுள்ளது. நோயுற்றுப் படுத்திருந்த விசாலாட்சியை வருத்தம் பார்க்கவந்திருந்த வள்ளியார், ''பாதியும் இந்தப் பெட்டைக்கு நாலூறுதான், எடி மேனை சிவகாமி, கொஞ்சம் வேப்பமிலையும் இரண்டு மிளகாய்ச் செத்தலும் எடுத்துக் கொண்டாடி, இண்டைக்கு வெள்ளிக் கிழமை, ஒருக்கா நாவூத்துக்குப் பார்த்து விடுவம்'' என்று கூறி விசாலாட்சியின் தலைமாட்டில் அரை ரூபா வைரவருக்கு நேர்ந்து முடிந்து விடும் படியும் கூறுகிறாள். வருத்தக்காரர் இருக்கும் இடத்தில் கூட்டம் கூடிக் கதைத்துக் கொண்டிருக்கிறார் வேலுப்பிள்ளை, நோயை வைத்தியரிடம் காட்டுவதற்கும் ஆழ்வார் நாள் பார்க்கிறார். மர நிழலில் வள்ளியார் பனங்காய்ப் பணிகாரம் வைத்து விற்றுக் கொண்டிருப்பதும் நாடகத்தில் காட்டப்படுகிறது. சங்கரப்பிள்ளை தேர்தலுக்கு நிற்கிறார். நாட்டின்அரசியல் நிலையும் சமூக நிலையும் காலத்துக்குக் காலம் மாறுவது உணர்த்தப்படுகிறது.

நாட்டவன் நகர வாழ்க்கை 1947 இலே முதலில் கொழும்பிலே மேடையேறிற்று, அதனைப் பார்த்த விமர்சகர் பேராசிரியரைப் பலவ கையிற் பாராட்டினார். ''பேராசிரியரின் நாடகங்கள் பல வகையிலே தமிழுக்குப் புதியவை, தமிழ் நாடக மரபோடு மேனாட்டு நாடக முறையையும் பின் பற்றி எழுந்தது'' என்றும் ''சமுதாயத்தில் நிலவி வரும்பொய், பாசாங்கு வேஷம், வேண்டாத ஒழுக்கம் ஆகிய இவற்றை நாடக பாத்திரங்கள் மூலம் வெளிப்படுத்துவதனால் சமூகம் அறிந்து திருந்தும்'' என்றும் ''மேனாட்டு ஹாஸ்ய நாடக சம்பிராதாயத்தைப் பின் பற்றி எழுந்த நாட்டவன் நகரவாழ்க்கையில் தமிழ்ச் சமூகத்தின் ஊழல்கள் நகைச் சுவையுடன் சித்திரித்துக் காட்டப்பட்டன'' என்றும் பாராட்டின.

பொருளோ பொருள்

1948 இலே பேராசிரியர் ''பொருளோ பொருள்'' அல்லது ''கார்த்திகேயன் வீழ்கை என்னும் நாடகத்தை எழுதி மேடையேற்றினார்.

''பொருள்தான் வாழ்வின் உயிர்நாடி என்பதன்தவறை எடுத்துக்காட்டும் இந்த நாடகம். நாடகம்-அதன் வெற்றி எல்லாம் பேராசிரியர் கணபதிப்பிள்ளை அவர்களதே.எம்மை இடைவிடாது இயக்கியவர் திரு. சு.வித்தியானந்தன் அவர்கள்'.

என்று தமிழ்ச்சங்கத்தின் இருபத்திரண்டாம் ஆண்டில் முதல் முதலாக வெளிவந்த 'இளங்கதிர்' சஞ்சிகையில் இதழாசிரியன் குறிப்புரையில் த. சண்முகசுந்தரன் எழுதியுள்ளார்.

இழைப்பாறிய ஓவசியர் தம்பியார்நம்பிக் கொடுக்கும் பணத்தைச் சூறையடித்துதன் மகளை இடாக்குத்தருக்குப் படிப்பித்து மேனாட்டு நாகரிக வாழ்க்கை நடத்துவதையும், அவர் தங்கை அவரால் புறக் கணிக்கப்பட்டு காணிகளை ஈடுவைத்துத் தன்மகனை இங்கிலாந்துக்கு அனுப்புவதையும்,அவன் சீ.சி. எஸ்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தினசரி தியானம்

### அடைக்கலம்

அன்றே என்றன் ஆவியும்
உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்
கொண்டபோதே கொண்டிலையோ
இன்றோர் இடையூறு எனக் குண்டோ
எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய்
நானோ இதற்கு நாயகமே.

-மாணிக்கவாசகர்

முன்னை முழுமுதற் பொருளே, உன்னை நான் அடைக்கலம் புகுந்து விட்டால் பின்னே என்னை வருத்தும் துன்பம் யாது உளது.

தந்தையின் கையைப் பிடித்துக் கொண்டு நடக்கும் குழந்தை எச்சரிக்கையாக இருக்க வேண்டும். ஆனால் தந்தையினால் சுமந்து எடுத்துச் செல்லப்படும் குழந்தைக்குக் கவலையொன்று மில்லை. கைகொட்டி அது மகிழ்ந்திருக்கலாம். தெய்வத்திடம் அடைக்கலம் புகும் அன்பர்கள் பாங்கு அத்தகையது. பொறுப்பு அனைத்தும் கடவுளுடையதாகிறது. அடைக்கலம் புகுகிறவர் அக்கணமே அமைதியுறலாம்.

- ஸ்ரீமத் சுவாமிசித்பவானந்தர்



கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ.சங்கப் பணியாளர்கள் நேற்றைய தினம் வடமராட்சி எள்ளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லத்தில் சிரமதானப் பணி மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

(படம்:-திருநீபன்)

# பாராளுமன்றக் கட்டிடத்தில் துணைவேந்தர்களின் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

மனிதவள அபிவிருத்தி கல்வி பண்பாட்டலுவல்கள் அமைச்சின் அழைப்பின் பேரில் பாராளுமன்றக் கட்டடத்தில் நடைபெறவுள்ள கூட்டம் ஒன்றில் கலந்து கொள்வதற்காக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம் பிள்ளை இன்று கொழும்புக்குச் செல்கிறார்.

நாளை வியாழக்கிழமை காலை 10.30மணிக்கு நடைபெறவுள்ள மனிதவள அபிவிருத்தி கல்விபண்பாட்டு அலுவல்கள் அமைச்சின் பாராளுமன்ற ஆலோசகர் கிளைச்சபையின் கூட்டத்தில் சகல பல்கலைக்கழகங்களின் உபவேந்தர்களும், மானிய ஆணைக்குழுத் தலைவர், செயலாளர் மற்றும் உறுப்பினர்களும் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

இக் கூட்டத்திற்கு மனிதவள அபிவிருத்தி கல்விபண்பாட்டலுவல்கள் அமைச்சர்கருணாசேன கொடித்துவக்கு தலைமை தாங்குவார். (வ-9)

### வவுனியா...

நடைமுறைப்படுத்து, விடுதலைப் புலிகள் மீதான தடையை நிக்கி அவர்களுடன் உடன்பேச்சுவார்த்தையை நடத்து, போன்று பல்வேறு கோஷங்களை எழுப்பிய வண்ணம் சென்றனர்.

இவ்எழுச்சி ஊர்வலம் வவுனியா அரச செயலகத்தைச் சென்றடைந்து அங்கு அரச அதிபரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டது. தொடர்ந்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழு அலுவலகத்திலும் யூ. என்.எச்.சி.ஆர் அலுவலகத்திலும், விடுதலைப்புலிகள் அலுவலகத்திலும் மகஜர்களைக் கையளித்தனர். (வ)

## சிறைச்சாலையில் போதைவஸ்து இருவர் கைது

வெலிக்கடைச் சிறைச்சாலையில் நேற்று முன்தினம் கண்டுபிடிக்கப்பட்ட ஒருலட்சம் ரூபா பெறுமதியான ஹெரோயின் போதைவஸ்து தொடர்பாக சிறைச்சாலையைச் சேர்ந்த இரண்டு உத்தியோகத்தர்கள் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சிறைச்சாலை சிற்றுண்டிச்சாலையில் இருந்து கண்டுபிடிக்கப்பட்ட இந்த ஹெரோயின் தொடர்பாக விசாரணை நடத்துமாறு உட்துறை அமைச்சர் ஜோன் அமரதுங்கா உத்தரவிட்டுள்ளார். (வ:)


கணனி மூலம்
CD RECORDING
140/=
BLANK CD இலவசம்
150பாடல்கள் அடங்கிய
MP.3 CD-190/=
அபிநயா மல்ரிஎலெக்ரோனிக்ஸ்
யாழ் வீதி சந்தையடி,மானிப்பாய்
(C/4642)

நாவலர் கல்வி நிலையம்
யாழ்ப்பாணம்
2004 A/L
துனிவியாபார முடிவுக் க/கு
ஆரம்பம்: 12.07.2002
நேரம்:- MON- 6-7(A.M)
WED- 6-7(A.M)
FRI - 6-7(A.M)
ஆசிரியர்:-
K.S.மோதிலால்
(B.B.A[Fm-spl]


### மாணவர்களும்...

பேச்சு நடத்தியுள்ளனர்.

இச் சந்திப்பில் வேலணை உதவி அரசாங்க அதிபர் இரத்தினமும் கலந்து கொண்டார்.

மாணவர்களின் போராட்டத்தை அடுத்து இன்று முதல் பிரதான வீதியூடாக மாணவர்கள் ஆசிரியர்கள் ஊழியர்கள் பாடசாலைக்குச் சென்றுவர வசதியாக காலை 8.30 மணிக்கும் பிற்பகல் 2.30மணிக்கும் பஸ்போக்குவரத்துக்கு அனுமதிக்கப்படும் என்று கடற்படையினர் உறுதியளித்துள்ளனர்.

இதேவேளை மேற்படி பாதையூடாக எந்நேரமும் அனைத்து மக்களும் போக்குவரத்துச் செய்ய அனுமதிக்க வேண்டும் என்றும், பாதையூடாக பொதுமக்கள் போக்குவரத்துக்கு அனுமதி மறுக்கப்படின் தீவக மக்கள் வெகு ஜனப் போராட்டம் மூலம் தமது எதிர்ப்பை வெளிக்காட்டுவர் என்றும் தீவக மக்கள் நலன்காப்பகம் எச்சரித்துள்ளது. (இ,5,75,201)

### தீவகத்திற்கு...

வைஸ் அட்மிரல் சந்தகிரி வவுனியாவுக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

தீவகத்தின் புதிய கடற்படைத் தளபதியாக எதிர்சிங்கா நேற்று பொறுப்பேற்றுக் கொண்டார். (வ)

## கைலெயிஸின் கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

கைலெயிஸ் கொண்சுமர் உற்பத்தி நிறுவனத்தின் அனுசரணையுடன நடைபெறும் புகைப்படக் கண்காட்சி இன்று யாழ்ப்பாணம் வேம்படி பெண்கள் உயர்தரப் பாடசாலையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

இக் கண்காட்சியை யாழ் மாவட்ட பாடசாலை மாணவர்கள் இன்றும் நாளையும், நாளைமறுதினமும் எதிர்வரும் 15ந் திகதியும் பார்வையிட முடியுமென்றும். பொதுமக்கள் எதிர் வரும் 13ம், 14ம் திகதிகளில் பார்வையிட முடியுமென்றும்.

இவ இலவசக் கண்காட்சி கொழும்பில் காண்பிக்கப்பட்டு பெரும் வரவேற்பை பெற்றதென்றும் நிறுவன முகாமையாளர் எஸ்.நிமால் தெரிவித்துள்ளார். (இ)

## 'பியூஜி' நிறுவனத்தின் கருத்தரங்கு இன்று

(யாழ்ப்பாணம்)

பியூஜி படப்பிடிப்பு நாடா (பிலிம்) மற்றும் புகைப்பட பிரதியாக்கத்தாள்களை தயாரித்து விநியோகிக்கும் கைலீஸ் நிறுவனத்தினர் யாழ்ப்பாணம் வருகைதந்துள்ளனர்.

இவர்கள் இன்று காலை9.30 மணிக்கு யாழ்மாவட்ட படப்பிடிப்பு கலைஞர்களுக்கு இலவச கருத்தரங்கொன்றினை நடத்தவுள்ளனர்.

யாழ்ப்பாணம் லொயலாஸ் திருமறை மண்டபத்தில் நடைபெறவுள்ள இக் கருத்தரங்கில் படப்பிடிப்பு கலையின் விரிவாக்கம் புகைப்படப்பிரதிகளை உருவாக்கும் முறைகள் மற்றும் படப்பிடிபபில் நவீன கருவிகளின் பயன்பாடும் அதனைக் கையாளும் முறைகள் பற்றியும் போதிய விளக்கமளிக்கவுள்ளனர். (இ.2)

## சமாதானத்தை வலியுறுத்தி 2 லட்சம் கையெழுத்து

(யாழ்ப்பாணம்)

சமாதானத்தையும் சுதந்திரத்தையும் வலியுறுத்தும் வகையில் 2லட்சம் மக்களின் கையெழுத்துக்களை சேகரிக்கும் நடவடிக்கையில் ஐக்கிய சோசலிசக்கட்சி ஈடுபடவுள்ளது.

இன்றுமுதல் கையெழுத்துச் சேகரிக்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டு இம்மாத இறுதியில் அதனைக் கொழும்பிலிருந்து ஊர்வலமாக எடுத்துச் சென்று பிரமர் ரணில் விக்கிரமசிங்காவுக்கும், ஜே. வி.பியின் தலைவருக்கும் கையளிப்பதென்று முடிவுசெய்யப்பட்டுள்ளதாக கட்சியின் யாழ் மாவட்ட செயலாளர் க.தேவதாசன் தெரிவித்துள்ளார். (இ)

### கண்காணிப்புக்குழு...

அமுலாக்கலில் ஏற்பட்டுள்ள நடைமுறைச் சிக்கல்கள் தொடர்பாகவும் விரிவாக ஆராயப்பட்டது.

நேற்றுக்காலை இடம்பெற்ற இப்பேச்சுவார்த்தைகளை அடுத்து மாலை இராணுவக் கட்டளைப் பணியகத்தில் கிழக்கிலங்கை இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சுனில் தென்னக்கோன் மற்றும் இராணுவ பொலிஸ் உயர் அதிகாரிகள் கலந்து கொண்ட உயர் மட்டப் பேச்சுவார்த்தைகளிலும் கண்காணிப்புக்குழுத் தலைவர் மற்றும் புலித்தேவன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இச்சந்திப்பின் போது யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள், 15ந் திகதி திறக்கப்படவுள்ள ஏ-5 செங்கலடி- பதுளை வீதி வழியாக பொதுமக்கள் சுதந்திரமாகப் போக்குவரத்துச் செய்தல், படைத்தரப்பிற்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் சுமுக உறவகளைப் பலப்படுத்தல், எல்லைப் பிரதேசங்களைப் பாதுகாத்தல் போன்ற விடயங்கள் ஆராயப்பட்டதாக சந்திப்பில் கலந்து கொண்ட படை அதிகாரி ஒருவர் தகவல் வெளியிட்டார்.

இதேவேளை நேற்று நடைபெற்ற இச் சந்திப்புக்களை அடுத்து இன்று கொக்கட்டிச்சோலையில் உள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகத்தில் விடுதலைப்புலிகளின் சிறப்புத்தளபதி கருணாஅம்மான், அரசியல் துறைப்பொறுப்பாளர் கரிகாலன், பிராந்திய அரசியல் துறைப் பொறுப்பாளர் விசு, துணைப்பொறுப்பாளர் துரை, மற்றும் மகளிர் அரசியல் துறைப்பொறுப்பாளர் பானுகா ஆகியோரை கண்காணிப்புக்குழுத் தலைவர் சந்தித்துப் பேசுவார். (வ)

### முஸ்லிம்களின்...

உட்பட 26பேர் நேற்றுச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தியிருந்தனர்.

இரண்டு கட்டங்களாக இடம் பெற்ற இச் சந்திப்பின்போது அமைச்சர்களான ரவூக் ஹக்கீம், திலக் மாரப்பன, ஜோன அமரதுங்க, அத்தாவுல்லா, நூர்தீன மசூர், பாராளுமன்ற உறுப்பினர்கள் ஹரீஸ், ஹிஸ்புல்லா உட்பட பலர் கலந்து கொண்டார்கள். (வ)

## முன்னாள் தளபதிக்கு பிணை அனுமதி

முன்னாள் விமானப்படைத் தளபதி எயர் மார்சல்ஜெயலத் வீரக்கொடியை பிணையில் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியுள்ளது.

நேற்றையதினம் மாளிகாவத்தை நீதிமன்றில் ஆஜரான இவரை 5 ஆயிரம் ரூபா காசுப்பிணையிலும், 20 ஆயிரம் ரூபா சரீரப் பிணையிலும் செல்வதற்கு நீதிமன்றம் அனுமதி வழங்கியது.

கடந்த மாதம் 15ம் திகதி இடம் பெற்ற வாகனவிபத்துச் சம்பவம் தொடர்பாக விமானப்படைத்தளபதி தனது பதவியை இராஜினாமாச் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (த)


BURNS PHILPS LANKA
நிறுவனத்தினரால் நடாத்தப்படும்
வெதுப்பகப் பொருட்களின் தயாரிப்பிற்கான

வாடிக்கையாளர்களுக்கு ஓர்

COMMERCIAL BANK

# வாடிக்கையாளர்களுக்கு ஓர் முக்கிய அறிவித்தல்

கொமர்ஷல் வங்கி யாழ். கிளை வங்கியின் ஏனைய கிளைகளுடன் **Comnet** வலைப்பின்னலில் இணைக்கப் படவுள்ள நிகழ்வின் அங்குரார்ப்பண வைபவம் 11.07.2002 வியாழக்கிழமை காலை 8.30மணிக்கு வங்கியின் கணனி மயப்படுத்தப்பட்ட கட்டடத்தில் நடைபெறவுள்ளது.

எனவே அன்றைய தினம் வங்கியின் சகல அலுவல்க ளும் காலை 10.00மணிக்கே ஆரம்பமாகும் என்பதை இத் தால் தயவுடன் அறியத்தருகிறோம். இதனால் ஏற்படும் அசௌகரியங்களை பொறுத்துக் கொள்ளுமாறு வேண் டுகின்றோம்.

அன்றைய தினம் இந் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமா றும் வேண்டுகின்றோம்.

முகாமையாளர்
வர்த்தக வங்கி
யாழ்ப்பாணம்

(C/4643)



நிறுவனத்தினரால் நடாத்தப்படும்
வெதுப்பகப் பொருட்களின் தயாரிப்பிற்கான
செய்முறையும்/விளக்கமும்

மேற்படி நிகழ்ச்சி இன்று 10.07.2002ம் திகதி மு.பகல் 9.00 மணிக்கு ஸ்ரீ வரதராஜா வெதுப்பகம் சுழிபுரத்தில் ஆரம்பமாகும் இதில் அனைவரும் பங்குபற்றி பயன்பெறும் வண்ணம் வேண்டுகின்றோம்.

**Burns philps**
ஸ்தாபனத்தினர்

(5660)



## உபநயன அழைப்பு

இடம்: எமது இல்லம் 'அமிர்த பவனம்' பன்னியம்பதி வீதி, பருத்தித்துறை

காலம்: நாளை (11.07.2002) வியாழக்கிழமை 10.40- 11.20 வரை உள்ள சுப நேரம்

எமது குமாரன்

**சிரஞ்ஜீவி பிரஷாந்த சர்மா**

அவர்களுக்கு

உபநயன பிரம்மோபதேசம் நடைபெறும். உறவினர்கள், கலைஞர்கள், அன்பர்கள், எல்லோரும் இதில் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம். இவ் அழைப்பை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

திரு. இராம சபேசக் குருக்கள்
தம்பதிகள்

(5650)


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தினரால் இல.15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 10.07.2002ல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.